[illegible]

தொகுதி. உ இதழ். சஞ்சிகை - எ

2 1928-29. 67

JL
Y592Cm211, N27eH:
N28. 2.7
129803.

JL
~/592 C.m21",N27CH
N28-2.7



29

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி,

தொகுதி - உ] | விபவ௵ - ஆடி௴ | [பகுதி - எ

5 SEP

உள்ளடக்கம்.


| | |
|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை ... | ... உ௱ஙிஙி |
| ஆராய்ச்சிப் பகுதி ... | ... உ௱ஙிரு |
| சுகாதாரப் பகுதி ... | ... உ௱ஙிஎ |
| பொது விஷயங்கள் ... | ... உ௱ஙிக |
| தொழிற் பகுதி ... | ... உ௱சஎ |
| நிரூபங்கள் ... | ... உ௱சஎ |
| செங்குந்தர் கிளர்ச்சி ... | ... உ௱சக |
| பாமாலைப் பகுதி ... | ... உ௱கக |
| செங்குந்தர் பஞ்சாங்கம் ... | ... உ௱கச |


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

Registered No. 1514

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு வகுப்பினரும் சீரடையவேண்டிச் சங்கங்கள் பல நிறுவி வெகு ஊக்கத்துடன் உழைத்து வரும் இக்காலத்தில் பண்டைப் புகழ்பெற்ற செங்குந்த குல மக்கள் மட்டும் இது விஷயத்தில் யாதொரு ஊக்கமுமின்றிக் கிடப்பதையுன்னி, நமது குல முன்னேற்றத்திற்கென உழைக்கச் சென்னையில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கின்றது. இம்மகாஜனசங்கம் நமது குலமக்கள் கல்வி, ஒழுக்கம், செல்வம், அந்தஸ்து முதலியவற்றில் மேன்மை படையும் வழியைத் தேடிவருகின்றது.

குலத்தொண்டு செய்துவருவதே இம்மகாஜனசங்கத்தின் நோக்கமாதலால் அது நிறைவேறத் தென்னிந்தியாவிலுள்ள செங்குந்தர் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பும் உதவியும் ஆதரவும் அவசியமாகையால், மகாஜன சங்கத்தார் தற்போது செங்குந்தர் வதியும் கிராமங்கள் தோறும் பிரசார வேலைசெய்து வருகின்றனர். பிரசாரகர்களைத் தங்கள் கிராமங்களுக்கு வரவழைக்க விரும்பும் குலாபிமானிகள் சங்க அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதுவார்களாக.

---


முதல்தரமான வேலைப்பாடு!  நம்பிக்கையான வேலைக்காரர்கள்!!

## நகைகள்! நகைகள்!

**குறைந்த சார்ஜுகள்.**

நாங்கள் சிமைக்கமலங்களிலும், இதர கற்களிலும் குறைந்த கூலியில் கண்களைக் கவரும்படியான விதமாய் வேலைகள் செய்து கொடுக்கிறோம். தவிர நாங்களே உங்கள் மனதிற்குப் பிடித்த நல்ல கற்களையும் வாங்கிக்கொடுக்கிறோம். இதர பொன் வெள்ளி வேலைகளும் மெடல்களும், என்கிரேவிங் வேலையும் செய்து குறித்த காலம் தவறாமல் கொடுக்கின்றோம். எங்களிடம் ஒருதரம் ஆர்டர் செய்து பாருங்கள். ஒருமுறை ஒரு சிறிய ஆர்டர் கொடுத்துப் பரீக்ஷித்துப் பாருங்கள்.

**ஆர்டர் வாங்கிக்கொள்ளும் நேரம் காலை 7-மணி முதல் 8-30-மணிவரையில்.**

ராஜரத்தினம் பிரதர்ஸ்,

**நகைவேலைக்காரர்கள், நெ. 8, இரண்டாவது தெரு, புதுப்பேட்டை, மதராஸ்.**

---

## இரகஸ்யம்

ஒரு யோகிஸ்வரரால் அனுக்கிரகம் செய்யப்பட்டது அநேகம் பிரபுக்கள் பரீட்சை செய்து நற்காட்சி பத்திரங்களும் அளித்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் அதிக பிரயோஜனத்தைத் தரத்தக்கதாதலால் இது உலோகோபகாரமாய் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது தளர்ந்த தேகத்தைக் கெட்டிப்படுத்தி, நரம்புகளுக்கு வலுவேற்றித் தேகபுஷ்டி கை, கால், இடுப்பு, மார்பு, முதலிய உறுப்புகளின் வலிவு, சுறுசுறுப்பு, சந்தான உற்பத்தி, பேரானந்தம், மனோதைரியம் முதலியவைகளை உண்டுபடுத்தி, மெலிந்து தளர்ந்துபோன வயோதிகரும் வாலிபருடைய சகல சுகங்களையும் அனுபவிக்கச் செய்யும் மேகவெட்டை, வாய்வு, மலபந்தம், பசியின்மை முதலிய வியாதிகளை நீக்கி, தேகாரோக்கியத்தை உண்டாக்கிவிடும். ஒரே வேளை மருந்தில் சொப்பனஸ்கலிதம் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கித் தாதுவை வஜ்ஜிரத்தைப்போல் கெட்டிப்படுத்தி, நரம்புகளுக்கு முறுக்கேற்றி ரகசிய இன்பத்தை உண்டாக்கி விடுமென்பது உண்மை. இதற்குப் பத்தியமில்லை. புட்டி 1-க்கு இரண்டு ரூபாய் மூன்று புட்டி வாங்கினால் பால் செலவு கிடையாது. இவ்வற்புத சஞ்சீவியின் பெயர் கற்பகவிந்தாதி லேகியம்.

**வேண்டுவோர்,**

மானேஜர், கற்பக மெடிகல் ஹால்,

**சுவாமிமலை போஸ்ட், S. இந்தியா என்னும் விலாசத்திற்கு எழுதவும்.**



# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - உ | விபவஹூ - ஆடிமீ | பகுதி - எ |
| --- | --- | --- |



25 SEP 1928

129803


திருச்சிற்றம்பலம்.

மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணா
துனையுனு முணர்வை நல்காய் ஒற்றியூருடைய கோவே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

**நம்மவர் ஜன சங்கியைக் குறிப்புக்களை நாம் சீக்கிரம் சேகரிக்கவேண்டும்.**

தென்னாட்டிலேயுள்ள இதர வகுப்பினரெல்லாம் தத்தம் சாதி மகாநாடுகளை வருஷா வருஷம் கூட்டித் தத்தம் சமுதாயங்களுக்கு வேண்டிய அத்தியாவசியமான ஆசார சீர்திருத்தங்களைச் செய்து கொண்டும், அவரவர்கள் தொழில் முறைகளையும் பொருளாதாரங்களையும் வாழ்க்கை நலங்களையும் விருத்தி பண்ணிக்கொண்டும், அரசாங்கத்தில் இதர வகுப்புக்களோடு சமத்துவமான உரிமைகளையும் நலன்களையும் அடைய முயன்றுகொண்டும் மக்கட் கூட்டத்தின் முன்னணியில் நிற்கத் தீவிரமான வேலை செய்துகொண்டு வருகின்றனர். நமது கைக்கோள சமூகமோ லக்ஷக்கணக்கான ஜனத்தொகையினையுடையதாயிருந்தும், இதுவரைக்கும் ஒரு சாதிமகாநாட்டினையாவது கூட்டி மேற்சொன்ன முறையிலே வேலைசெய்ய முற்படவில்லை. இதுகாரணமாக நமது சமூகம் நாமெல்லாம் வருந்தும் வண்ணம் பின்னணியிலேயே நிற்கின்றது. அதை முன்னணிக்குக் கொண்டுவரும் நன்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நமது தலைச் சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் கூடிய சீக்கிரம் நூதனமான ஒழுங்கில் நம்மவர்களின் முதலாவது ஜாதி மகாநாட்டைக் கூட்ட முயன்று வருகின்றது.

இம்முயற்சி சித்தி பெறுவதற்கு நம்மவர் எங்கெந்த கிராமங்களில் வசிக்கிறார்கள் என்பது பற்றியும், ஒவ்வோரிடத்திலும் நம்மவரின் ஆண் பெண் சங்கியை, கல்வி பயில்வோர் சங்கியை, தொழில் பொருள் ஆதாரங்களையொட்டிய விவரங்கள் முதலியவற்றைப்பற்றியும் நமக்குத் திருத்தமான தகவல்கள் கிடைக்க வேண்டியது அவசியமாகின்றது. இக்குறிப்புகளை உடனே நமது தலைச்சங்கம் அடையும் வண்ணம் நமது சந்தா நேயர்கள் உதவிபுரிவார்கள் என்ற நம்பிக்கையோடு கீழ்வரும் அட்டவணையைப் பதிப்பித்துள்ளோம் இதை ஒவ்வொரு கிராமத்திலுள்ளவர்களையும் தனித்தனி காகிதங்களில் பெயர்த்து எழுதிக்கொண்டு

தத்தம் கிராமங்களையொட்டிய வரையில் விவரங்களைத் திருத்தமாக எழுதி எமக்கு அனுப்புமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம். இக்குறிப்புக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் நம்மவரின் தற்கால நிலைமையைத் தெளிவாக நமக்குத் தெரியப்படுத்துமாகையால், மகாநாடு கூட்டுவதற்கு முன் அவற்றை எமக்கு அனுப்பிவைக்குமாறு நமது சந்தா நேயர்களை மிகவும் வினயமாக வேண்டிக்கொள்கின்றோம்.

1. கிராமத்தின் பெயர், இடம்
2. அங்கு வதியும் செங்குந்த குடும்பங்களின் தொகை : ஆண் பெண் சங்கியை.
3. சொந்த தறியில் நெய்வோர் எத்தனை ?
   கூலிக்கு நெய்வோர் எத்தனை ?
   விவசாயம் செய்வோர் எத்தனை ?
   வியாபாரிகள் எத்தனை ?
   இதர தொழிலாளர்கள் எத்தனை ?
   ஓட்டர்கள் எத்தனை ?
4. இலவச போர்ட்டு ஸ்கூல் கிராமத்தில் இருக்கிறதா ? இருப்பின், எத்தனை ?
   ஆண் பள்ளி எத்தனை ?
   பெண் பள்ளி எத்தனை ?
   பிரைமெரி ஸ்கூல் எத்தனை ?
   செகண்டரி ஸ்கூல் எத்தனை ? எத்தனை வகுப்பு உடையது ?
5. இதர பள்ளிக்கூடங்கள் உண்டா ?
   பிரைவேட் பள்ளி எத்தனை ? வைத்திருப்பவர் பெயருடன்
   மிஷன் பள்ளி எத்தனை ? மிஷன் பெயருடன்
6. பள்ளிக்கூடமேயில்லையாயின், அருகில் எத்தனை மைல்தூரத்தில், எங்கு, எத்தன்மையான பள்ளிக்கூடமிருக்கிறது?
7. பள்ளியில் படிக்கும் செங்குந்த பிள்ளைகளின் மொத்த தொகை
   வகுப்பு வாரியாக ஆண் எத்தனை ? பெண் எத்தனை ?

| | ஆண் | பெண் |
|---|---|---|
| முதல் வகுப்பு | | |
| இரண்டாவது வகுப்பு | | |
| மூன்றாவது வகுப்பு | | |
| நான்காவது வகுப்பு | | |
| ஐந்தாவது வகுப்பு | | |

8. கிராமத்தில் ஐந்தாவது வகுப்புக்கு மேல் படிக்கும் [illegible] செங்குந்தர்களின் [illegible] பெயர் விலாசம், தொழில், வருமானம் முதலியன)
   ஆறாவது வகுப்பு
   ஏழாவது வகுப்பு
   எட்டாவது வகுப்பு
   நான்காவது பாரம்
   ஐந்தாவது பாரம்
   ஆறாவது பாரம்
   எப்.ஏ.
   பி.ஏ.
   இதர பட்டதாரிகள்.
9. கிராமத்தில் பிறந்து வெளியூர்களில் வியாபாரத்திலோ உத்தியோகத்திலோ உள்ளவர்களின் பெயரும் தொழிலும் விலாசமும்.
10. கிராமத்தில் செங்குந்த உபாத்தியாயர்கள் இருப்பின் அவர்கள் பெயர், படிப்பு, சம்பளம், விலாசம்.
11. (a) கிராமத்தில் இதர ஜாதியர் இருப்பின் அவர்கள் பெயர், தொகை.
    (b) அவர்களுள் ஓட்டர்கள் எத்தனை ?
12. கிராமத்திலுள்ள ஆலயங்களின் பெயர், ஏற்பட்ட காலம், தர்மகர்த்தர்களின் பெயரும் சாதியும்.
13. சபைகளும் சங்கங்களும் இருப்பின் அவற்றின் பெயர்களும் நோக்கங்களும்
14. கிராமத்திலுள்ள பிரபல செங்குந்த வியாபாரிகளின் பெயரும் விலாசமும் வியாபாரத்தின் தன்மையும்
15. பண்டிதர்கள் இருப்பின் அவர்கள் பெயரும் விலாசமும் தொழிலும்
16. இதர செங்குந்த பிரபலஸ்தர்களின் பெயரும் விலாசமும்
17. (a) கிராமத்திலோ அக்கம்பக்கத்திலோ பஞ்சாயத்து யூனியன், தாலூகாபோர்டு முதலிய ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கத்தினராயுள்ள செங்குந்தர்களின் பெயர்களும் விலாசங்களும்
    (b) ஒவ்வொன்றிலும் இதர சாதியாரின் சங்கியை
18. கிராமத்துச் செங்குந்தரின் முக்கியமான குறைகள்
19. அவர்களின் முக்கியமான விருப்பங்கள்
20. இதர விஷயங்கள் (ஸ்தல ஸ்தாபனங்களுக்குத் தேர்தலை அடைவும் செங்குந்தர்களின் பெயர் அகரவரிசை முதலியன, அடுத்த தேர்தல் முதலிய இதர விஷயங்கள்.)

அனுப்புவோர் கையொப்பமும், விலாசமும்.

பத்திராதிபர்.



# ஆராய்ச்சிப் பகுதி

ஈட்டி யெழுபது.

## முன்னுரை.

ஈட்டி யெழுபதாவது எண்ணால் பெயர்பெறும் பிரபந்தவகையுளொன்று. இதனை விருந்தின் பாற் படுத்திப் பொருள் தொடர் நிலைச் செய்யுளாகப் பெரியோர் கூறுவர். செங்குந்தரது குலப்பெருமைகளை அவரது ஈட்டியின் மேல் வைத்துக் கெம்பீரமாக விளக்குவது இந்நூல்.

இந்நூலை ஆக்கியோர் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தரென்று மகா மஹோபாத்தியாய பிரம்மஸ்ரீ வே. சுவாமிநாதைய ரவர்களும், செந்தமிழ்ப் பேரறிஞர் பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கா ரவர்களும் கூறியுள்ளார்கள். தமிழாசிரியர் ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் இதனை இயற்றியவர் ஒட்டக் கூத்தரே எனக் காட்டியுள்ளார்கள். இற்றைக்கு இருபத்தாறு வருடங்களுக்கு முன் ஸ்ரீமான் வி. கனகசபைப் பிள்ளையவர்கள், B. A., B. L. இந்நூலை ஆதாரமாகக் கொண்டு பின் வரும் சரித்திர ஆராய்ச்சியை ஸ்தாபிக்கின்றார். அவ்வனம் ஸ்தாபிக்கும் வாயிலாக இந்நூலை இயற்றியவர் ஒட்டக்கூத்தரென உண்மையை நாட்டியுள்ளார். கர்ணபரம்பரையாக வழங்கிவரும் உண்மைக்கும் மேற்கூறிய பேரறிஞர்கள் கூறும் உண்மைக்கும் சிறிதும் மாறுபாடில்லை.

ஈட்டி யெழுபதைக் கொண்டு பிள்ளையவர்கள் கூறும் சரித்திர விவரங்களாவன :— பல்லவ ராஜர் ஆண்டு வந்த காலத்திலே செங்குந்தரென்னும் மரபினர் குறுநில மன்னவராகவும், படைத்தலைவராகவும், தமது மூதாதையர் தொன்றுதொட்டு இருந்து வந்தது போலவே ஏற்பட்டு, மிகுந்த செல்வராய் இருந்தார். பல்லவ அரசர் செங்குந்தருக்கு முதலியாரென்று பெயர் கொடுத்திட்டனர் (ஈட்டி 29) :— இந்திர னயன்மா தேவர் யாவர்க்கு முதன்மை யாக வந்தபான் மையிற நல [illegible] படை யத்த ஞர்க்கு முந்திய கா [illegible] முதலிய [illegible] குந்தர் சந் ததிக்கு மப்பா முதலிய பெயர் கூறும்,

### ஒட்டக்கூத்தர் திருநாள்

ஆவணி௴ 13௳ செவ்வாய்க்கிழமை

(28-8-28)

வருஷா வருஷம் இத் திருநாளைக் கொண்டாடுவது செங்குந்த குல மக்கள் குழுமி வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் அவசியமாகுமெனச் சென்ற வருஷம் ஆவணி மாதத்திய பத்திரிகையில் எழுதி யிருந்தோம். அவ்வண்ணமே பற்பலவிடங்களிலும் அத்தினம் விழா கொண்டாடப் பெற்றுக் குந்தத்தின் பெருமையை நிலைநாட்டிய இக் குலதிலகர்க்கு நாமம் இயற்றவல்ல சிறந்த கைம்மாறாக அன்று தொடங்கி இதுகாறும் ஏறக்குறைய நூற்றிருபது செங்குந்தர் சங்கங்கள் தோன்றி நம்மவரிடையே ஒரு பெருங் கிளர்ச்சியை யுண்டாக்கியிருக்கின்றன. இச்சங்கங்களெல்லாம் இவ்விழாவினை இவ்வருடமும் கொண்டாடிப் புதுச் சங்கங்களையும் புத்துணர்ச்சியும் நம்மவரிடை உண்டாக்கிய புது உற்சாகத்துடன் முன்னிலும் பன்மடங்கு தீவிரமாகக் குலத்தொண்டில் ஈடுபடுமென எதிர்பார்க்கின்றோம்.

பத்திராதிபர்.

மேலும், தியாகராஜர் பூஜிக்கப்படும் விடங்கமென்று பெயர் பெற்ற ஏழு ஸ்தலங்களிலும், மாகாளமென்று வழங்கும் சப்த ஸ்தலங்களிலும், வேறு சிவாலயங்களிலும், செங்குந்தர் தரும கர்த்தராய்ப் பரிபாலனஞ் செய்து வந்தார் :—

விடங்கமே ழாதி வீதி விடங்கமா ரூர்வெண் காடும்
கடங்கொளுந் திங்கே மூதார் பஞ்சகன் னதிசாய்க்
[காடும்
இடங்கொள்மா கான மேழும் மிடைமரு தார்செங்
காடும்
தொடங்கிய தரும வாட்சிச் செங்குந்தர் தொகுதி
வாழி.
(ஈட்டி 3.)

தென்னாட்டிலே கடற்கரையிலுள்ள திருச்செந்தூருக்குக் கப்பலின்மேற் சென்று அவ்வூரிலிருந்த சுபன் என்னும் செங்குந்தத் தலைவனைத் துணையாகக்கொண்டு தங்களது ராஜாதி ராஜனுகிய சோழனுக்குப் பகைவனான ஈழநாட்டரசனை ஒரு நாளிலேவென்று அங்குள்ள பொருள்களைத் திறையாகக் கொண்டுவந்தார் செங்குந்த வீரர் :—

ஆழிசேர் கடற்கு மாங்கோர்
கலமேற் சென்றே யப்பாற்
சூழ்திருச் செந்தூ ருற்ற
சுபனென்பான் றுணையாய்க் கொண்டு
வாழிரா சாதி ராச
மன்னவன் மருவ லான்றன்
ஈழனா டொருநா டன்னிற்
றிறைகொண்டவன் றேற்ற குந்தம்
(ஈட்டி 34.)

பின்னும், ஆதித்த சோழனோடு மாறுபட்டு நெடுநாள் அகப்படாதிருந்த வல்லானென்னும் அரசனைக் கொல்வதற்குச் செங்குந்தரிற் பழூர் வீரன் முதலிய பன்னிருவரும், தம்முள் ஒருவர் மாயின் யாவரும் மாய்வோம் என்று சபதஞ் செய்துகொண்டு சென்று, அவருட் பதின்மர் இறந்துபோக எஞ்சிய இருவர் கையில் வல்லான் அகப்பட்டான். பின்னர் அவன் மனைவி வேண்ட அவள் கணவனைக் கொல்லாது விட்டுவிட்டு, அப்புறம் அவ்விருவரும் சோழனிடஞ் சென்று நடந்த வரலாற்றை அறிக்கையிட்டு, உள்ளம் சற்றேனுங் கலங்காமல் தம் தலைகளை அரிந்து வைத்துச் சபதத்தை நிறைவேற்றித் தமது போராண்மையை எங்குந் துலங்க வைத்தார். (ஈட்டி 45—59).

இன்னோரன்ன விருத்தாந்தங்களே யன்றி இம்மரபினரது பண்டைக்கால வழக்க ஒழுக்கங்களும் வேறு சில செய்கைகளும் மேம்பாடுகளும் ஈட்டியெழுபதைக்கொண்டு அறியக்கூடும். ஆகவே பிராசீன சரித்திர விமரிசனம் செய்வார்க்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

இனி, முதலாவதாக, ஒட்டக்கூத்தருடைய உண்மையான சரித்திரம் யாது என்பதையும், இரண்டாவதாக, செங்குந்தரது உண்மையான தொன்மை வரலாறு யாது என்பதையும் ஆதாரங்களோடு விசாரிப்போம்.

(தொடரும்.)

அ. பூ. இராஜூ முதலியார்.
காலஞ்சென்ற நாட்டாண்மை பூரண முதலியார்
கனிஷ்ட புத்திரர், சீர்காழி.

## சுகாதாரப் பகுதி

### வைசூரி அல்லது பெரியம்மை.

கிருமிகளினுலுண்டாகும் வியாதிகள் பலவற்றுள் சர்வ சாதாரணமாய்த் தெரிந்த "வைசூரி அல்லது பெரியம்மை" என்பதைப்பற்றி முதலில் கவனிப்போம்.

அறிவிற் சிறந்த நம் முன்னோர் விஷநோய்க்கு மாரியம்மன் விளையாட்டென்று பெயர் வைத்தனர். அங்ஙனமவர்கள் அதற்கப்பெயர் மிகவுமாழ்ந்த கருத்துடனிட்டனரென நன்கு விளங்கும். எங்ஙனமெனில், வியாதி தொத்து வியாதி. இவ்வியாதியஸ்தர்களைத் தொட்டால் அந்நோய் ஒட்டுமென்றேதினுல் அக்காலத்தியவர்களுக்குச் செவிடன் காதிற் சங்கு ஊதினாதற்கொக்கும். ஆகவே மூதறிவாளர், காலத்திற்கேற்ற கோலமென, ஓர் தேவதையின் கூத்தென்று சிற்சில நிற்பந்தங்களை யேற்படுத்தியும், அவற்றின்படி நடந்து அனுசரிக்கச் செய்யும் ஆசாரத்தில் வழிபடப் பரம்பரையாகக் கொண்டு விடுத்தனர்.



ஒரு வீட்டிலொருவருக்கு அம்மை வார்த்திருந்தால் அவ்வீட்டில் மாரியம்மனிருப்பதாலவ்வில்லத்திற்குக் கண்டவர்கள் அசுத்தமாகப் போகக்கூடாது ; அவ்வகத்தாரும் பல விடங்களுக்கேகலாகாது ; தீட்டுபடக்கூடாது ; வேப்பிலையும் கையுமாக இருக்க வேண்டுமென்றும், வீடு நடை யுடை முதலானவைகள் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்றும், பல நிற்பந்தங்களை யேற்படுத்தினார்கள். அவைக்கிணங்கியங்ஙனே நடந்தும் நடந்துகொண்டும் வருகிறார்கள்.

அவைகளை யூகித்தால் அவர்களுமிது தொத்து வியாதியே, அசுத்தமானவர்கள் பலர் சேர்ந்தால் பரவுமெனும் கொள்கையைக்கொண்டவர்கள் என்றுள்ளங்கை நெல்லிக் கனியென விளங்கும். ஆனற் சாமானியமாக உள்ளதைச் சொன்னு லுறவற்று விடுமென வுன்னித் தேவதையின் கூத்தென்றும், தேவதைக்கு விரோதமாக நடந்தாற் சீறிக் கேடு விளைப்பாளென்றும் பயமுறுத்தினரென்பது திண்ணம்.

தற்காலத்திய அறிவாளர்களோ அவ்விதசூழ்க் கிணங்குவது சந்தேகந்தான். இவர்களோ ஒவ்வொன்றையும் புத்தி பூர்வமாக ஆராயுந்தன்மையை வகித்துள்ளார். ஆகவே பயத்தை நீக்கி யுண்மையைக் கூறத்தான் வேண்டும்.

ஆகவே, இவ்விஷநோய் கட்புலனுக் கரிதாயுள்ள கிருமிகளின் சேஷ்டைதான். அவை தேகத்திற் புகின், அவ்வததேகத்திற்கேற்ப வொன்று, பத்து, நூறு, ஆயிரமென எண்ணிறந்தவைகளாகப் பரவி வியாதியை விருத்திப்படுத்துகின்றன. சிற்சில தேகஸ்திதிக்கு கிருமிகள க்ஷீணமடைந்து வியாதி சொற்பமாக முடிகிறது.

ஆனல் எவ்வமையமெங்ஙனமெப்படி இருக்குமோ நாமறியோம். வெள்ளம் வருமுன்னர் அணைபோடுவ தறிவாளிகளின் செயலாகையால், சுருங்கச்சொல்லி நன்குவிளக்கிய ஔவை வாக்குக் கிணங்க நம்மா லியன்றவரையில் நோயக் கிடங்கொடாமலிருக்க முயலவேண்டும்.

"முயற்சி திருவினையாக்கும், முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்"

என்பதை யெங்ஙனங் கையாள்வோமெனின் ; நம்மில்லந் தேகம் நடை யுடை முதலானவைகள் எவ்வமையமுஞ் சுத்தமாயுஞ் சீர்திருத்தமாயுமிருக்கப் பழகுத லத்தியாவசியம். இத்துடன் இவ்விஷநோய்களின் தன்மைகளையும், அவைகளைப் போக்கும் மார்க்கங்களை யறிந்த துரைத்தனத்தாரா லேற்படுத்தின விஷயங்களையும் நிபந்தனைகளையும் அவர்களுடன் ஒத்து அனுசரிக்கவேண்டும் கவர்ன்மெண்டாரிவ்வித நிபந்தனைகளை ஆயிரக்கணக்கான திரவியங்களைச் செலவிட்டு ஏற்படுத்தினது பிரஜைகளின் நன்மைக்கே யொழிய தங்கள் சுயநலத்திற்கென்று அனுவளவேனு மெண்ணுதலிழுக்கு. யாதோ சிலகாரணங்களினுல இவ்விஷநோய்கண்டவர்கள் சீக்கிரத்தில் ஒரு கெடுதியுமின்றி தப்பித்துக்கொண்டால் நலம். இங்ஙன மின்றி இவ்வியாதியால் மரணமடைந்த சிலர் நீங்கலாக, அனேகர் குருடானமையும், நொண்டி முடமானமையும், மிக விகார வடுக்கள் பெற்றமையும், நாம் கண்ணாரக் கண்டுங் காதாரக் கேட்டுமிருக்கிறோ மல்லவா? இன்னுஞ் சிலர் பட்ட துன்பங்களையும், படுந்துயரங்களையு மெழுத வட்டிலடங்கா. ஆகையாற்றான் துரைத்தனத்தார் சம்பிரஜைகளை இவ்வித கோர கஷ்டங்களுக் காளாகாதபடி பாதுகாக்கக் கடமை பூண்டு, திரவியஞ் செலவிட்டுழைத்து வருகின்றனர். ஆகவே நாமுமவருடன் கலந்து அவரேற்பாட்டிற்கிணங்கி அவர்கள் செய்யும் நன்மைகளின் பயன்களை யடைவது நம்புத்தியின் திறமை.

இதைவிடுத்து இவ்வியாதி மாரியம்மன் விளையாட்டென்றும், அதைத்தடுக்க நம்மால் முடியாதென்றும் முரட்டு நம்பிக்கையில மூழ்மோசம் போய் வாளாவிருந்தால் வீணாய் முடியுமென்பது திண்ணம்.

வைசூரி கிருமிகள் அசுத்தமான விடங்களிற் றங்கினுல் உடனே அவை சீக்கிரத்திற் பரவி அவைகளின் செயல்களைச் செவ்வனே செய்து விடுகின்றன. அவைக் கவ்விடம் பிரதிகூலமாயின் அவை சிரமமடைந்து தானே நசித்துப் போகின்றன.

ஆகவே, முனிசிபாலிடிகளுள்ள விடங்களிலெல்லாஞ் சானிடெரி அதிகாரிகள் தங்கள் சிப்பந்திகளைக் கொண்டு அவ்விடங்களைச் சுத்தக் தக்கவாறு வீடுகளையும் வீதி முதலானவைகளையுஞ் சுத்தமாக வைத்திருக்கிறார்கள். இவ்விஷநோய் எங்கு நேரிடுகிறதோ அங்குள்ளவர்கள் உடனே சானிடெரி அதிகாரிகளுக்குத் தெரிவித்துவிட்டால அவர்கள் சகல ஏற்பாடுகளுஞ் செய்துகொண்டு அந்நோயங்குநின் றகற்றும்படியாக முயற்சிசெய்வார்கள். ஆகையாலிவ்விஷநோய்

அணுகினவுடனே யாதொரு மறைவுமின்றி அதிகாரிகளுக்குத் தெரிவித்து அவர் செய்யும் ஏற்பாடுகளுக் கிடங்கொடுத்தால்போதும். அவர்கள் செய்வதாவது, வியாதியஸ்தனைத் தனிப்படுத்துவதும், அவனைச் சார்ந்தவர்களுக்கம்மை குத்துவதும், வீடுகளைச் சுத்தஞ்செய்வதுந்தான். அங்ஙனமின்றிப் பயந்து மறைத்து வைத்தால் அந்நோய் மற்றவர்களுக்குப் பரவித் துன்பத்துக்குள்ளாக்கு மென்பதற் கையமேயில்லை.

• இவ்வியாதியஸ்தனைத் தொத்து வியாதி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனால் அங்குக் கொப்பளங்களைக் கத்தரித்து விடுகிறார்களென்று சிலர் சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன். அப்படி யங்கு செய்வதுமில்லை, செய்கிறதுமில்லை, யாதாமொருவர் வற்புறுத்திச் செய்யச் சொன்னாலுஞ் செய்யப் போகிறது மில்லை என்று உறுதியாகச் சொல்லலாம். அங்கு செய்யுஞ் சகல முயற்சிகளும் வியாதிகண்ட மனிதன் தேறவும் அந்நோய் அவ்விடத்திற் பரவாதிருக்கவும் செய்யுங் காரியங்களே தவிர வேறல்ல.

இவ்வித ஏற்பாடுகளில்லாத சிற்சில கிராமங்களிலுள்ளவர்கள் என்ன செய்வதென்று கேட்கக்கூடும். துரைத்தனத்தார் அங்கு மிவ்வித ஏற்பாடுகளை யேற்படுத்தத் தயாராக விருக்கிறார்கள். எங்கெனுமொருவனுக் கிவ்விஷ நோய்வந்தால் அங்குள்ளவர்கள் உடனே கிராம முனிசிபுக்குத் தெரிவிக்கவேண்டும். அவர் தாலூக்கா தாசில்தாருக்குத் தெரிவிப்பார். அவருடனே கலெக்டர் முதலானவர்களுக்குத் தெரிவிப்பார். உடனே அதற்கென்றுள்ள சிப்பந்திகள் வந்து கிராமத்திலேயேற்ற ஏற்பாடுகளைச் செய்து அந்நோயைப் போக்குவார்கள். இவ்வித ஏற்பாட்டின் பயனை யடையப் பிரஜைகளின் ஒற்றுமைதான் வேண்டும்.

இவ்விஷநோய்க் குறிப்பு முதலில் கடுமையான ஜுரமிருக்கும். பிறகு தலைநோய், கண், மூக்கெரிச்சலிருக்கும். வாந்தியு மெடுப்பார்கள். ஜுரங்கண்ட மூன்றுநாள் நெற்றி, முகம், மார்பு முதலான இடங்களில் கெட்டியான சிறு உருண்டைகள் விரலுக்குத் தென்படும். பிறகு இரண்டொரு நாட்களில் தேகமெங்கும் பரவும். பிறகு நீர் கொப்பளங்களாகும். அவ்வகை நீர்க்கொப்பளங்களாகிப் பத்து நாட்கள் கழித்துக் கறுப்பாகி உலர ஆரம்பிக்கும். பின் உலர்ந்த தோல்கள் உதிர ஆரம்பிக்கும். அப்பொழுதுதான் பிறருக்கு முக்கியமாகப் பரவும். அவ்வமயம் அங்குள்ள

ஜனங்கள் சர்வ ஜாக்கிரதையாகத் தப்பித்துக் கொள்ளவேண்டும்.

அதற்காகவேதான் வியாதியஸ்தரைத் தொத்துவியாதி ஆஸ்பத்திரியிலோ அல்லது வேறு தனியிடத்திலோ அப்புறப்படுத்துவதும், அங்கு பிறர் அடிக்கடி போகாம லிருக்கச் செய்வதும்.

ஆஸ்பத்திரியில் ஏற்கனவே தகுந்த ஏற்பாடுகள் செய்துள்ளார். அப்படி இல்லாத இடங்களில் வைசூரி நோயாளியை நல்ல காற்றோட்டமும் வெளிச்சமுமுள்ள தனியறையில் வைக்கவேண்டும். குளிர்காற்று மேலே படக்கூடாது. அத்தனியறையில் நோயாளிக்கு வேண்டிய முக்கியமான சாமான்கள் தவிர வேறெவ்வித சாமான்களு மிருக்கக்கூடாது. அம்மை குத்திக்கொண்டவர்களும் அம்மைவார்த்துத் தேறினவர்களும் தைரியமாக அருகிலிருக்கலாம். துணி படுக்கை முதலானவைகளைப் பிரதி தினமும் மருந்துகலந்த (Lysol lotion) ஜலத்தில் நனைத்துக் கொதிக்கவைத்துச் சுத்தஜலத்தில் துவைத்து வெயிலில் நன்று யுலர்த்தவேண்டும். நோயாளியின் எச்சில் மல முதலியனவற்றை மருந்துகலந்த ஜலத்துடன் சேர்த்துத் தூரத்திற் கொட்டவேண்டும். தேறின நோயாளி கண்டவிடங்களிற் சஞ்சரிக்காமலும், அவரோடு மற்றவர்கள் நெருக்கமாகச் சேராமலும் சுமார் 10 நாட்களிருந்தால் நலம். சௌகரிய மிருந்தால் எண்ணெயோடு யூக்லிப்டஸ் அல்லது கார்பாலிக் தைலத்திற் சில துளிகளைச்சேர்த்து அவ்வெண்ணெயை நோயாளி உடம்பெல்லாம் பூசி, சோப்பினால் கழுவி, ஸ்நானஞ் செய்து வைக்கலாம். அவ்விதஞ் செய்தால் தேகத்தின் பொருக்குகள் நெருங்குதற்கு அகோரமான வடுக்களேற்படா. தைரியமுள்ளவர்கள் உள்ளுக்குச் சித்தாமணக்கெண்ணெய சாப்பிட்டு வந்தாலுட்கூடு குளிர்ந்து சீக்கிரத்தில் தேகஞ் சாந்தி யடையும். என்னுடைய பெரியோராக எனக்கு வைசூரி கண்டபோது செய்துவந்த சிகிச்சையையும் என்னுடைய சொந்த அனுபவத்தையும் இங்கெழுதினேன்.

இதைவிடுத்து, ஊரிலொருவருக் கம்மை வார்த்தால் அவ்வூரார் ஏராளமாகக்கூடி மகமாரி வந்துவிட்டாளென்று முன்னமே ஓர் கரகத்தை நிறுத்தி விடுகிறார்கள். இதை நோக்கின் சிலர் மேல தெய்வம் வந்ததாகக் கொண்டும் ஆரவாரமுமாய் விடுகிறது. மாரியம்மன் ஊரில் கூடாரமடித்து விட்டாள், இத்தனை உயிர் காவு கேட்கிறாள்; அதற்குப்பதிலாக ஆடு கோழிகளைக் காவு



கொடுத்தால்தான் வேறூருக்குப் போவாளென்று பயமுறுத்திவிடுகிறார்கள். பூசாரிகளுமிதுதான் சமையமென்று லாகிரி வஸ்துக்களையும் சேர்த்து விடுகிறார்கள்.

இதன்பலனைவது, இரவெல்லாம் அம்மனை வர்ணிக்கிறோமென்று ஆரவாரித்துத் தாங்களும் பிறரும் கண்விழித்திருந்து லாகிரிவஸ்துக்களைப் பானம் செய்கிறதும். பிறகு பொங்கல்வைத்துப் பூசைபோட்டு ஆடு கோழிகளைக் கொலைபுரிகிறதுமே. அவைகளோ உங்கள் மக்களும் நீங்களும் நோய்பட எங்கள் மக்களும் நாங்களுமென் செய்தோம் எனக் கதறுகின்றன. பிறகு அம்மாம்சங்களைப் புசிக்கின்றார்கள். அச்செந்துக்களுக்குப் பிணியிருந்தால் அப்பிணியும் புசிப்பவர்களுக்கு வருகிறது. ஆகவே, இச்செய்கைகளினால் துராசாரமும், பிணியும், பாபமுமே பலனேயொழிய வேறு பலனில்லை. ஆகையினால் இச்செயல்களை யறவே விட்டுவிடத்தான் வேண்டும்.

ஆனால், மாரியம்மனை பூசிக்கவேண்டாமென்று சொல்லவந்தவ னல்லன். மாரியம்மனை வழிபடும்பராசக்தியாக உன்னி பூஜைசெய்து வணங்கலாம். காகத்தின் முன்னே அல்லது மாரியம்மனாலயத்தின் முன்னே பொங்கலிட்டுக் தேங்காய்களைக் கூறையிட்டுச் சுசியான பதார்த்தங்களை நைவேத்தியஞ் செய்து வாயாரவாழ்த்திச் சந்தோஷப்படுத்தலாம். இத்துடன் துரைத்தனத்தார் செய்யும் அனுகூலமான வழிகளையும் அனுசரிப்பது முக்கியம்.

எனவே, பிள்ளையைச் சாக்கிட்டுப் பூதம் விழுங்குவதுபோல, அம்மன்மேற் பழிசுமத்தி கொலைபுரிதல் புலாலுண்ணல், கள்ளுண்ணல் முதலிய கொடிய துர்ச்செய்கைகளை யறவே விட்டு எல்லாம் வல்ல கருணாகரக்கமாகிய நம் குலதெய்வமான முருகப்பெருமா னருள்பெற்ற நா மிவ்விதஞ் செய்யாமலிருக்கத்தான் வேண்டும்.

இயற்கையாகவே செங்குந்த மக்கட்கில்லாத கள்ளுண்ணல் புலால்புசித்தல் முதலிய துராசாரக்கை மத்தியிற் சேர்த்துக்கொண்டவர்களை சீக்கிரத்தில் அப்பாவமான தொழிலினின்று மீட்டு, முருகப்பெருமானின் அன்பர்களாக்கிக் கொள்ள நம் தேஜோமயமாகிய சுப்ரமண்ணிய மூர்த்தியை யெக்காலத்திலும் மனமுருகிப் பிரார்த்திப்பீரென்று மிக்க ஆவல் கொண்டுள்ளேன்.

மா பரமதுநாத முதலியார்,
சானிடரி இன்ஸ்பெக்டர், திருமயிலாப்பூர்.

## பொது விஷயங்கள்

### ஐயவினா.

நுண்ணறிவாளர்களே!

சென்ற 4 ம் பகுதிச் சஞ்சிகையில் "விதி பெரிதா, மதிபெரிதா" என்ற விஷயத்தை "ஐயவினா" என்ற தலைப்பின்கீழ்ப் பிரசுரிப்பித்திருந்தேன் அதற்கு "மதியே பெரிது" என்ற தலைப்பின்கீழ் "ஐயவினாவுக்கு விடை" என்று ஐவர்பாடி சோதிடம் ப. சிதம்பரநாத முதலியார் அவர்கள் சென்ற 5ம் பகுதிச் சஞ்சிகையில் மதிதான் பெரிதென எழுதியுள்ளார். அதனை யான் கண்ணுற்றதில் பின்னும் என் மனத்தே ஐயங்கள் உண்டானமையின் அவ்வையங்களையும் நீக்கிக் கொள்வான் பொருட்டு மீண்டும் வினவலானேன்.

சோதிடம் ப. சிதம்பரநாத முதலியார் அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கின்றார்: ஊழ்வினையின் வலிகூற வேண்டிவந்தவர் "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந்தான் முந்துறும்" என்று கூறிப் பின்னர் "ஊழையு முப்பக்கங்காண்பர் உலைவின்றித் தாழாதுஞற்றுபவர்" என்று கூறியிருப்பதால், முயற்சியுடையோர் விதியினை வெல்லலார் என்று கூறியிருக்கிறார். "ஊழையு முப்பக்கங் காண்பர்" என்ற வார்த்தைகளின் கருத்தை உன்னி நோக்கின், முயற்சியை இடைவிடாது செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்த வேண்டியே கூறியிருக்கின்றாரென்பது விளங்கும். அக்குறளுக்குச் சிறந்தோர் உரைசெய்த பரிமேலழகர் ஆண்டு ஊழ் என்பதற்குப் "பயனை விலக்குவதாகிய ஊழ்" என்றும், விசேட உரையில், "ஊழ் ஒருகாலாக இருகாலாக வல்லது விலக்கலாகாமையின் பலகால் முயல்வார் பயன் எய்துவ

ரென்பார், உப்பக்கங்காண்பார்" என்றார். என்றும், "தெய்வத்தானாகா தெனினு முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும்" என்ற குறளுக்கு 'முயன்ற வினை பால் வகையாற் கருதிய பயனைத் தாராதாயினும் முயற்சி, தனக்கிடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலி யளவு தரும். பாழாகாதென்றும்; முடிவாகத் தெய்வத்தான் (விதியால்) இடுக்கண்வரினும் முயற்சி விடற்பாலதன றென்பது, இவை மூன்று பாட்டானும் கூறப்பட்டது என்றும் கூறியவற்றால் முயற்சி கைவிடக்கூடாதென்பதை யுணர்த்தும் பொருட்டே இவ்வாறு கூறியிருக்கின்றார் என்பது போதரும். அன்றியும் "ஊழையும் வெல்வர்" எனக்கூறாது ஊழையும் உப்பக்கங்காண்பர் எனக் கூறியதே ஊழினை முயற்சி வெல்லாதென்பதற்குச் சான்றாகும். இன்னும் ஊக்கமுடைமை என்னும் அதிகாரத்து "உள்ளுவதெல்லா முயர் வுள்ளல் மற்றது தள்ளினுந் தள்ளாமை நீர்த்து" என்ற குறளில் மற்றது தள்ளினுந் தள்ளாமை நீர்த்து என்றதற்கு அவ்வுயர்ச்சி பால் (விதி) வகையிற் கூடிற்றில்லையாயினும் அக்கருத்துத் தள்ளாமை நீர்மையுடைத்து எனப் பரிமேலழகர் கூறிய வுரையானும் முயற்சி விதியுள் அடங்குமென்பது விளக்கம். அன்றியும் அவர் கூறியாங்கே முயற்சியால் ஒரு செயலைச் சாதிக்கலாமெனக் கொள்ளினும் அம்முயற்சி தானுண்டாதற்குக் காரணமாதல் யாதென ஆராயவேண்டுமன்றோ? அப்பொய்யாமொழிப் புலவரே "......மற்றொன்று சூழினுந் தான்முந் துறும்" (தன்னை விலக்குதற் பொருட்டுத் தனக்கு மறுதலை யாவதோருபாயத்தைச் சூழினும் தான் அவ்வுபாயமேயாயினும் பிறிதொன்றானும் வழியாக வந்து அச்சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும். விசேடவுரை எல்லாம் வழியாக வருதலுடைமையின் ஊழே வலியதென்பதாம்) என்றும்; "ஆகூழாற்றோன்றும் அசைவின்மை கைப்பொருள்—போகூழாற்றோன்று மடி" என்றும் கூறியிருக்கிறார். இ-ள்:—ஒருவற்குக் கைப்பொருளாதற்குக் காரணமாகிய ஊழால் முயற்சியுண்டாம். அஃது அழிதற்குக் காரணமாகிய ஊழால் மடியுண்டாம் என்பது. "பேதைப்படுக்கு மிழவூழறிவகற்று—மாகலூழுற்றக் கடை", "நுண்ணிய நூல் பல கற்பினும், மற்றுந்தன்—உண்மையறிவே மிகும்" என்பவைகளால், 'ஒருவனுக்கு எல்லாவறிவு முளவாயினும் கைப்பொருளிழத்தற் கேதுவாகிய ஊழ்வந்து உற்றவிடத்து அஃது அதனை (அறிவை)ப் பேதையாக்கும். இனி அவனறிவு சுருங்கியிருப்பினும் கைப்பொருளாதற் கேதுவாகிய ஊழ்வந்து உற்றவிடத்து அஃது அதனை (அறிவை) விரிக்கும்" என்பதும், "பேதைப்படுக்கும் ஊழுடையான் ஒருவன் நுண்ணிய பொருள்களை யுணர்த்தும் நூல் பலவற்றையும்கற்றானாயினும் அவனுக்குப்பின்னும் தன் ஊழானாகிய பேதைமை யுணர்வே மேற்படும்" என்பதும் போதரும். "இருவேறுலகத் தியற்கைதிருவேறு தெள்ளியராதலும் வேறு" என்னுங் குறளையும் கவனிக்க. மற்ற குறளும் எடுத்துக் காட்டப்படல் மிகையாயினுமாமென விடுத்தேன். அன்றியும், இறையனாரகப்பொருளில் 'அதுவே தானே யவளோ டவன்வழித் தமியர்காணக் காமப் புணர்ச்சி யிருவயினொத்தல்" என்ற சூத்திரத்துத் தமியர்காண என்றற்குத் தம் முணர்வினானன்றி எதிர்ப்பட என்றுரை கூறி விசேடவுரையில் அஃதியாங்ஙன மென்றற்கு 'இன்ன நாள் இன்னபக்கலத்து இன்னபொழுது இன்னவிடத்து இவள் காரணமாக இவன் தன்னுணர்வினனல்லனும் என்பதூஉம் இவன் காரணமாக இவள் தன்னுணர்விலளல்லளாம் என்பதூஉம் முன்னே முடிந்து கிடந்தது. அது பின்னுங் கொணர்ந் தெய்துவிக்கும்; என்னை? "ஒளிப்பினு மூழ்வினை யூட்டாது கழியாது" என்பதாகலான் என்று ஐயனாவான் உருத்திர சருமனார் பதந்தோறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப உரைகூறி நற்றனர் கூறியுள்ளார். இவைகளான் ஒருவன் செய்யும் செயலுக்கு விதிமுதற் காரணமென்பதும், முயற்சி முதலியவை துணைக்காரணமென்பதும் உள்ளங்கை நெல்லியென விளங்கும்.

இன்னும், அவர் தைலமுந் திரியு முள்ளவரை தீபமானது பிரகாசித்தெரிய வேண்டியது விதியாயிருப்பினு மென்று கூறியுள்ளார். இது தான் விதியென்றறிய ஒருவனால் முடியுமாவென்ற ஐயந்தோன்றி நிற்கிறது. எதுவரை எரிய விதியுளதோ அதுவரை தானே யெரியும் என்றன்றோ எண்ண வேண்டியிருக்கிறது. பாதுகாப்பினமையாது விட்டில், காற்று முதலியவற்றால் தீபம் அணையின் விதிவலி குறைவுபடுமென்றார். ஈண்டு பாதுகாக்கத் தூண்டுவது மதியா? மதியாயின் மதியை விரிப்பது தான் யாதோ? ஊழன்றோ? ஊழ்தான் என்பதை முன்னே கூறியுள்ளேன். தீபத்தின் பிரகாசம் நின்று விடுவது விதியாயின் அது பொருந்தாதென்று கூறி, அங்ஙனம் நின்றுவிடுவது அவமிருத்து என்றார். அவமிருத்து என்பது தான் என்ன? அது தனியா? அன்றே மற்றெ



தனால் வந்தது? விதியாலென்றே கொள்ள வேண்டுமென்றன்றோ தோன்றுகிறது.

இன்னும், மதிவன்மையினால் காலபாசத்தையும் மார்க்கண்டேயர் விலக்கிக்கொண்டனரென்பதை வற்புறுத்தத் தாயுமானவர் "மார்க்கண்டனுக்காக மறலிபட்ட பாட்டை யுன்னிப் பார்க்கிலன்பர்க்கென்ன பயங்காண்பராபரமே" என்று கூறியுள்ளாரென்று அவர் கூறியுள்ளார். இதில் தாயுமானவர் மதியால் விலக்கினரென்னும் கருத்துத் தோன்றக் கூறவில்லையன்றே? 'அன்பர்க்கு', என்று கூறியதால் அன்பினைப் பற்றியன்றோ கூறியிருக்கின்றாரென்பது உய்த்துணரக் கிடைக்கின்றதன்றோ? இவரே "வாராததெலாம் ஒழிய வருவனவெலா மெய்த" எனத் திருவாய்மலர்ந்தவரன்றோ? மார்க்கண்டனையே எடுத்துக் கொள்ளலாம். அவனுக்கு விதி பதினாறு வயது, தனது மதியின் விதியால் என்றும் பதினாறுவயதினனானான் எனக் கூறலாம். ஆயின் விதி பதினாறு வயதுதானே விதிப்படியே முடியுமன்றோ? விதிப்படி முடியாதென வெற்றுரை கூறுவது அசம்பாவிதம் ஆதலின், பதினாறு வயதிலேயே அவன் விதிப்படி இறந்திருத்தல் வேண்டும். அங்ஙனமிறவாமையின் வயது பதினாறாயினும் சிவபூசைத் திறத்தால் என்றும் பதினாறு வயதினனாவானென்பதே விதி' யெனக் கொளல் வேண்டுமெனவே காண்கிறது.

இனி, சீவர்கள் செய்யுஞ் செயல்கள் யாவும் ஈசுவரச் செயலால் நடக்கின்றனவெனக் கூறவில்லை. விதிச்செயலால் நடக்கின்றனவெனவே நம்புகிறேன். ஈசுவரச் செயல் வேறென்றும் ஜீவர்செயல் வேறென்றும் கூறுவதை ஒத்துக் கொள்ள வேண்டியதே. இதனை மதி பெரிது என்ற வியாசத்திற்கு எடுத்தாளுதலும் வேண்டாமெனவே எண்ணுகிறேன். சீவர்கள் என்பவர்கள் நாநாகாம கர்மங்களோடு கூடிய புத்தியின்கண் பிரதி பிம்பிக்கும் சேதனப்பிரதி பிம்பங்கள் என்றன்றோ கைவல்யம் கூறுகின்றது. (65-ம் செய்யுளினுரையில்) 34 வது செய்யுளில் "அழுக்கொடு பற்றுஞ் சீவர்க்கு" என்று அக்கைவல்ய நூலாசிரியர் கூறிப் போந்தனர். இதனால் ஜீவன் கர்மசம்பந்தப் பட்டவன் என்பதன்றோ அறியக் கிடக்கின்றது. கர்மசம்மந்தம் ஊழ் தானே? அன்றியும் கைவல்யத்தில் 19 செய்யுளில், 'போத காலநேமிப் பிரமையிற்றிரிவன்" என்பதனால் ஜீவன் காலச்சக்கரத்திற்குக் கட்டுப் பட்டவனென்பதும்; சந்தேகந் தெளிதற்படலத்தில், 47-வது செய்யுளில், "போகமாய் வரும் பிராரர்த்த கர்மங்கள் புசித்தன்றோ நசித்தேகும்" என்றும்; 103ம் செய்யுளில் "விஞ்சின பிராரத்தத்தின் வினையநுபவித்துத் தீரும்" என்றும் ஸ்ரீமத்தாண்டவராய சுவாமிகள் கூறியிருப்பதால் சீவர்கள் பிராரர்த்த கர்மத்தை அநுபவித்தே தீரவேண்டு மென்பதும் தெரிய வருகின்றதே.

அல்லாமலும், "விதிப்படி வருவது வரட்டும் என நாம் முயற்சியின்றி ஒரு தொழிலும் செய்யாமல் விட்டுவிடலாமே! அவ்விதி தானே நமக்குத் துக்க சுகத்தைக்கொடுத்துச் செல்லுமன்றே?" என அவர் கூறுகின்றார். நம்மை முயற்சிசெய்யத் தூண்டுவதும், தொழில் புரியத் தூண்டுவதும், வறிதேயிருக்கத் தூண்டுவதும் விதியெனக் கொள்ளின் மிகையோ? மிகையன்றென்பதே முற் கூறிப் போந்தவைகளான் முடியும். இறைவனருளைப் பெற்றுய்வது அறிவின் கடமையன்றி விதிவழியாகாதென "இனைய குற்றங்கள் எவர் குற்றமாகும்" என்னும் கைவல்லியச் செய்யுளினடியாற் கூறுகின்றார். அச்சீவர்கள் குற்றஞ் செய்வது எதனால்? அறிவின் பேதத்தால். அறிவைப் பேதப்படுத்தல் யாது? விதியின்றோ? இதனால் இறைவன் அருளைப் பெறற்கு அறிவைத் தூண்டி முயற்சியுறச் செய்வது விதியென்றுதானே கொளல் வேண்டும். சிவத்தியான முடையவர்கள் ஊழ்வலியை விலக்குவர் எனக் கூறி ஔவையார் கூற்றாகிய "சிவாயநமவென்று" என்ற வெண்பாவை எடுத்துக்காட்டினார். அவ்வௌவையாரே

"ஆழவமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானாழி தோழீ!
நிதியுங் கணவனு நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்"

எனக் கூறிப் போந்ததாற் பெறப்படுவதென்னை? ஞானிகட்குப் பிராரர்த்த கர்மமில்லை யென்றல் யாங்ஙனமோ? அவர்கள் சஞ்சித கர்மத்தைத் தானே ஞானத்தழலாற் சுட்டு வெண்ணீறாக்குவர் அவர்களும் பிராரப்தத்தை அநுபவிப்பவர் என்றன்றோ கைவல்யம் கூறுகிறது. இராமர் அவ்வவதாரத்திலே வாலியைக் கொன்ற தோஷத்தால் பின் வேடனாக வந்த வாலியால் உயிர் துறந்து தனது கர்மத்தை அநுபவித்தாரென்பதும் பிராரர்த்தத்தை அநுபவித்தே யாகல் வேண்டும் யாரேனும் என்பதை வலியுறுத்துகின்றது. ஞானிகட்குப் பிராரத்தமில்லை யெனக் கொள்ளினும், அவர்கள் அடைந்த ஞானம் எதனால் வந்தது? விதியாலன்றோ.

விதி வழி வந்த ஞானத்தால் பிராரப்தக்தைத் தொலைப்பார் என்றால் பிராரப்தத்தைக் தொலைப்பது ஞானமா? விதியா? ஞானம் துணைக்காரணமென்றும் விதி முதற் காரணமென்றும் கொள்ளவேண்டுவதுதானே.

இன்னும் புராண இதிகாச ஆகமாதிகள் விதி பெரிதெனவே முறையிடுகின்றன வென்பதைக் கீழ்வருவனவற்றா லறியலாம்.

திருவிளையாடற் புராணம், விருத்த குமார பாலரான படலத்தில்,

"குலனு மோர்கிலன் கோத்திரஞ் சத்திர மற்றும்
நலனு மோர்கிலன் கல்வியு மொழுக்கமு நன்னுந்
தலனு மோர்கிலன் கன்னியைத் தத்தஞ் செய்தானைப்
புலனு மோர்த்தவன் விதிவழி மதியெனப்புலர்ந்தார்"

என்ற செய்யுளின்படி வேதமாதி கற்ற சைவ வேதியன் வைணவமதத்தைக் கொண்டு பிச்சைபுக்குண்பானாகிய ஒரு வாலிபனுக்குத் தன் கன்னியை எல்லாப் புலனுமோர்ந்து தத்தஞ் செய்து கொடுத்தானாயின் அவன் மதிமருண்டவாறுதானென்னே? தன்மதத்தனா? தனவானா? புண்ணியனா? அச்சைவ வேதியன்தான் மதியில்லாதவனா? ஊழ்வினை வயப்படியன்றோ மதி புலவு மென்றிதனாற் பெறக் கிடக்கின்றது.

பாரதத்தில் சபா பருவம் சூதுபோர்ச்சருக்கம் 225ஞ் செய்யுளில்;

"பொறைவன் சிந்தைத் திருமனுக்குப்
பொய்ச்சூ தறிந்தும் பொரவென்ன
குறைவந் ததுதன் விதிவலியாற்
குறைந்தான் யாவுங் கொடுத்தென்பர்"

என்று தருமன் சூதினால் அனைத்துந் தோற்றவிடத்தும், விராடபர்வம் கீசகன்வதைச் சருக்கம் 13 செய்யுளில், "காசகாலம் வரும் பொழு தாண்மையு ஞானமுங் கெடுமோ" என்று கீசகன் திரௌபதையைக் காதலித்தான் என்பதை யறிந்த விராடபுரத்தரசன் மனைவி கீசகனை நினைந்து வருந்து மிடத்தும்; ஷை பருவம் ஷை சருக்கம் 18 செய்யுளில், "விதியை யாவர் விலக்க வல்லார்களோ" என்று விராடபுரத் தரசியின் கட்டளைப்படி திரௌபதி கீசகன்பாற் சென்ற விடத்தும், துரோண பருவம் பதினைந்தாம் போர்ச்சருக்கம் 41வது செய்யுளில், "தாள்வலியாலெனைப் பல பல்வினை செய்தாலுந் தப்புமோ வானா விதி போல" என்று வீமன் யுத்தஞ்செய்தவிடத்தும், விதியினாற்றலை நூலாசிரியர் விதந்தோதியுள்ளார். பகவத்கீதை 7வது மாயாரூப வத்தியாயத்தில்

"ஊழாலே வருமிக்க மாயையினாலே யுள்ளம்
பாழாக வறிவங்கே பறியுண்டு கெடுகின்றோர்
வீழாத தீவினையே வினையாக விளைக்கின்றோர் [கேள்
கீழோனே ரெனையடையார் அடைவாருஞ் சிலருளர்

என்று வருஞ் செய்யுளால் மாயையும் ஊழினாலே வருமென்றும், அதனாலே அறிவு கெட்டுத் தீவினை செய்வரென்றும் பெறப்படுகின்றது.

ஸ்ரீசுவாமிநாத தேசிகரவர்கள் தாமியற்றிய இலக்கணக்கொத்தில்,

"நாலுரை போதகா சிரியர் மூவரு
முக்குண வசத்தான் முறைமறந் தறைவரே
யிம்முறை யெல்லா மெவர்பகுத் தறிவினு
மவத்தை வசத்தா லலைகுவர் திடனே
யதிமதி நுட்பமோ டதிவல் கற்பினும்
விதியது வசத்தால் விதிவிலக் கயர்ப்பார்"

என்றும், இறையவன் கவிக்கே குறைகூறிய நற்கீரர் இறையனாரகப் பொருளில், தலைவியானவள் தனது ஆயம் நீங்கப்பெறத் தனித்து நிற்பளோ வென்ற வினாவிற்கு "எட்டியுஞ் சுட்டியுங் காட்டப்படும் குலத்தாளல்லளாகலானும் பான்மை (விதி) அவ்வகைத் தாகலானும் பிறவாறு நினையார் பிரிவார் தோழிகளாகலின் தனித்து நிற்பளெனக் கூறியுள்ளார் ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் 'வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும் பெரியவழக்குக் கிழுக்குமுண்டோ" என்றும்,

"விதியையும் விதிச்சென்ன விதித்திட்ட
மதியையும் விதித்தம்மதி மார்மையிற்
பதிவைத்த பசுபதி நின்னருட்
கதியை யெப்படிக் கண்டு களிப்பதே"

என்றும்,

"என் விதியை என்னவிழி தயிலாதன்றே"

என்றும் திருவாய் மலர்ந்துள்ளார். இவர்க்கும் விதிவழியே மதி நடத்தலென்றல் கருத்தாமென்பது மேற்கண்ட செய்யுட்களால் விளங்கும்.

அதிவீரராமபாண்டியர் தனது நைடத நூலில் தமயந்தி கனவு கண்டதைக் கூறமிடத்து: "மென்மலத்தாள் விதியாற் காட்டுஞ் செயலினை விலக்கலாமோ" என்றும், அன்னத்தைக் கண்ணுற்ற படலம் 14செய்யுளிலே,



"தண்ணருந் தளிக்குங் கூந்தற்
றமையந்தி முலையும் போர்வே
லண்ணறன் புயமுங் கூட்டும்
விதிவலி யழகிற் றம்மா"

என்றும், சூதாடுபடலம் 24 செய்யுளில்

"வெங்கலி
தன்னியதானு மூழ்துரந்தவாற்றினு
முன்னருஞ் சூதினின் முயல்கின் றனரோ"

என்றும், ஷை படலம் 26வது செய்யுளில்

"சூழ்வினைப் புணர்ப்பினாற் சொன்னவாறிசைந்து"

என்றும், நகர் நீங்கு படலம் 6வதுசெய்யுளில்,

"ஊழ்வலி யிதுவென உள்ளந் தேறினான்"

என்றும், கான்புகு படலம், 11வது செய்யுளில் அன்னந் துகில் கவர்ந்து சென்றவிடத்து,

"வினைவலி யிதுவென மெலிவு நீக்கினான்"

என்றும், ஷை படலம் 16வது செய்யுளில்

"பொலிவில் மண்டபம்
"மேயின னரசர்கோன் விதியின் கோட்பினால்"

என்றும், ஷை படலம் 17வது செய்யுளில்,

"பார்மிசை
மன்னினர் விதியினும் வலியராவரே":

என்றும் கூறியுள்ளார்.

இன்னும் அரிச்சந்திர புராணம் நகர் நீங்கிய காண்டம் 31 செய்யுளில்,

"வாழ்வினை வளர்ந்தபொழு
தென்னின்மிக வாழ்ந்தாய்
தாழ்வினை திகழ்ந்தபொழு
தென்றமென தாழ்ந்தாய்
சூழ்வினை சமைக்கவிது சுற்றினவை யெல்லாம்
ஊழ்வினை யெனச்சொலி யுடன்கொடு நடந்தான்

என்றும், ஷை புராணம், மயான காண்டம் 57 வது செய்யுளில்

"வாளின் மிக்க வயமன்னர் வந்துநின்
றாளில்விழுந் தழலின் றிகிரிரூய்திருத்
தோளி லேற்றிச் சுடலையிலே வர
வேளின் மிக்கவ வெவ்வினையோ வென்றான்.

என்றும், ஷை புராணம் ஷை காண்டம் 59வது செய்யுளில்

"கொதித்தெழுந்து படர்கொடி கொண்டென
ததித்தன் வலிக் கண்டன றுத்தம
விதித்த தல்லது வேறுளதோ தென
மதித்திருந்தல் வல்லி விளம்பினான்"

என்றும், விதியின் வெற்றியை விளம்பியிருத்தல் காண்க.

ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளவர்கள் தமது திருவருட்பாவில் சிவநேசவெண்பா 15வது செய்யுளில் "ஊட்டுகின்ற வல்வினையாம்" என்றும், ஆளுடையவரசு அருண்மாலை 4வது செய்யுளில் "விதிவிலக்கிதென்றறியும் விளைவொன்றில்லா வினையனேன்" என்றும், மருட்கை விண்ணப்பம் 7 செய்யுளில் "ஊழ்வினைப்படியெப்படியறியேனுழன்றுகின்றனன்" என்றும், எழுத்தறி பெருமான் மாலை 24 செய்யுளில் "ஊழையகற்ற வுளவறியாப் பொய்யனிவன்" என்றும் கூறியிருக்கின்றனர்.

கந்தபுராணத்தில்,

"முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவற திருவொடு பொலிவ ராயினு
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையார்"
(மார்க்கண்டேயர் படலம் 214)

என்றும்,

"வறியவர் செல்வ ராவர்
செல்வர் பின்வறிய ராவர்
சிறியவ ருயர்ந்தோர் ஆவர்
உயர்ந்துளோர் சிறிய ராவர்
முறைமுறை திகழு மீது
முன்னை யூழ்வினையே கண்டாய்
எதிர்திர் வழங்கு ஞாலத்
தியற்கையு மினைய தன்றோ"
(இந்திரன் கரந்துறை படலம் 33 செ.)

என்றும் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் கம்பராமாயணம் உத்திரகாண்டம் திக்குவிஜயப் படலத்தில் "காலத்தினை ஞாலத்தவரெவரே கடப்பவர்தாம்" எனக் கூறப்பட்டிருப்பதுங் காண்க.

இன்னும், ஐம்பெருங் காப்பியங்களிலொன்றும் ஜீவக சிந்தாமணியில் [சீராக்

"அகந்தநாக கொண்டெடுத்த அருந்தவமுடைய
னாந்தன போகமெல்லா மவரவர் தந்தையரனே
யனந்தன வாழுநாளும்" என்றும்;

நீர்வழிச்சென்று நெடுங்கடல் சேராது எதிரே சென்ற நாலடியாரில், "உறற்பால நீக்கலுறுவர்க்கு மாகா பெறற்பாலனையவு மன்னவாம்'

என்றும், "மேலை வினைப்பயனல்லாற்பிற" என்றும், "முன்னை வினையாய்விடும்" என்றும், "செய்த வினையான் வரும்" என்றும், "உறற்பால தீண்டா விடுதலரிது" என்றும், விதிவலி விதந்தோதப்பட்டிருக்கிறது. இன்னும் விதி பெரிது மதியினுமெனப் பலநூல் கூறுநிற்கும். அவைகளை யெல்லாம் எடுத்துக்காட்டின் விரியுமாகலானும், மேற்கூறிப் போந்தவைகளே அதனை யுறுதிப்படுத்துபவையா யிருப்பதானும், இத்துடன் நிறுத்தி என் உள்ளக்கருத்தை உரைப்பான் புகுந்தேன்,

மேற்காட்டிய நூல்களில் இங்ஙனம் கூறியிருப்ப, மதி பெரிதெனக் கொள்ளின்எங்ஙனம் பொருந்தும்? மதிபெரிதென யாமறியா நூற்களிலுளதோ? அந்த மதி தானே பிரகாசத்தையும் பிரகாச மின்மையையுமடையுமா? உலகத்தோர் சாதாரணமாய் வருத்தநேர்ந்த காலத்தில் "விதிப்படி நடந்துதானே தீரும்" என மனதைச் சமாதானஞ்செய்து கொள்ளுகிறார்களோ? ஏன்? எண்ணியபடி முடியுமோ? "ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட்டொன்றாகும், அன்றி அது வரினும் வந்தெய்தும்; ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு"மன்றோ? தாயுமான சுவாமிகளும் "எண்ணாத வெண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி ஏழை நெஞ்சம்—புண்ணாகப்போகுதையோ போதும் பராபரமே" எனவும் கூறியிருக்கின்றனரே? இவைகளினால் எதனைப் பெரிதெனக் கொள்வது என்ற ஐயம் எனக்கு நீங்கிறதில்லை. அறிவாளிகள் அடியேன் ஐயத்தை அகற்றுவார்களாக.

ஜ. க. பெருமாள்சாமி முதலியார்,
செந்தமிழ் மாணவர், செங்குந்த வாலிபர்சங்கக்
காரியதரிசி, பவானி.

---

## அன்பு.

அன்பென்பது ஒருவரோடொருவரை மனத்தூய்மையுடன் பிணைக்கும் ஓரரிய கயிற்றிற்கு ஒப்பானது. இந்த அன்பானது அகிலத்தில் உலகத்துறையும் உயிர் வர்க்கங்களை யெல்லாம் ஒன்றுபடச் செய்யும் இயல்புடையது. இந்த அன்பின் தன்மை நம் கட்புலனுகாவாயினும் நெடுங்காலம் அக அன்புடன் கூடி அளவளாவியிருந்த இரு உயிர்கள் எதிர்பாராது பிரிய. நேர்ந்துழி பிரிவாற்றாமையினால் அவ்வக் கண்கள் மாட்டுத்தானே கண்ணீர் சொரிவதை நாம் பார்க்கக் கண்டவுடன், புகையிருந்த விடத்து நெருப்புளது என்று அநுமான அளவை கொண்டு தேர்ந்து தெளிவதுபோல, நாம் இவ்வுயிர்கள் மாட்டு அன்பின்றிக் கண்ணீர் வராது என ஓர்ந்துணரலாம்.

அன்பின் தனிமாட்சியை அளவிடற்கியலும் என்று வீறாவாரம் புரிவோர் கற்றவர் விரும்பும் கற்பகக் கனியாகிய அன்பே யுருவாம் சிவத்தின் நேர்மையை வரையறுத்துக் கூறியதற்கு ஒக்கும். இதுபற்றியன்றோ அறிவில் தெறமென விளங்கிய ஆன்றோர் சிகாமணிகள் நம்மிறைவன் அன்புமயமாயுளார் என்றும் அவ் அன்பு வடிவமாயிருக்கும் அவனை வழிபடும் நாமும் பிறவுயிர்கள்மீது அன்புபூண்டு வாழ்தலே சிறப்பென்றும் நமக்கு அறிவுறுத்துவான் வேண்டி

*அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே—என்றும்*
*எவ்வுயிரும் நீங்கா துறையுமிறை சிவனென்று*
*எவ்வுயிருக்கும் அன்பாயிரு.*

என்றும் இதுபோன்ற பல செய்யுள் இரத்தினங்களை நமக்கு அருளிப் போந்துளார்.

அன்பு என்னும் ஓரே சொல் பல்வேறிடங்களில் பல்வேறு காரண முகத்தானே பல்வேறு பெயர்களாக மாறியும் வருவதுண்டு. அஃதாவது

**நேயம்:**—ஒருவன் தன் பந்துவல்லாது அறிவிலேயும் வயதிலேயும் தனக்கு ஒத்தானாகிய பிறனொருவனோடு அக அன்புடன் கூடிவாழ்தல்.

**காதல்:**—தனது இல்லறவாழ்க்கைக்கு நற்றுணையாய்ப் பதியே தெய்வமென வதியும் மனையாளின்மேல் வைத்திருக்கும் முகமலர்ந்த அக அன்பு.

**அன்பு:**—தன் சுற்றத்தார் மாட்டு வைத்திருக்கும் அன்பு.

**அருள்:**—தானல்லாத பிற உயிர்களிடத்துக் கருணை கொண்டொழுகுதல்.

**பக்தி:**—எல்லாம்வல்ல முழுமுதற் பெருமானிடம் வைத்திருக்கும் உயர்நோக்கங்கொண்ட அன்பு.

இவ்வாறாகப் பல்வேறு பெயர்களாகக் கால வேறுபாட்டான் திரிந்துழலும் இவ் அன்பின் மாண்பை அதை யுடையவர் மாட்டே நாம் அறியக் கூடும் என்பதை நிலைநிறுத்தும்பொருட்டு ஒரு கதை மூலமாக விளக்க முன் வந்துளோம். நிடதேயத்துக்காவலனாகிய நளன் சரிதையை அறியாதார் ஒருவருமிரார்

*ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று*
*சூழினுந் தான் முந்துறும்.*

என்னும் முழுமறை மொழிக்கிணங்க, ஊழ்வலியினால் சூதாடி நாடிழந்து கானகம்புக்கு, செங்கமலவதனத்தாளைப் பிரிந்து, கார்கோடகன் என்னும் பன்னகத்தால் கடியுண்டு உடலழகு குன்றி அயோத்தி சென்று, ஆண்டு அரசுரிமை பூண்டு வரும் நம்ருதுபர்ணன்பால் சாரதியாய் அமர்ந்திருந்த போது, பல காரணத்தைக்கொண்டு தமயந்தியின் இரண்டாம் சுயம்வரம் அணைந்ததால் புரவலராகிய நீவிரும் வருதல்வேண்டும் என்று ஓலை விடுக்கக்கண்டு அயோத்தியரசன் ஆணைக்கிணங்க அவ்வரசனோடு நளன் வீமனூருக்குப் போந்தவுடன், சாரதியாகவந்த ஆடவன் நம் அன்பினுறை கணவனோ? அல்லனோ? என்று மனதின்கண்ணெழுந்த ஐயத்தைப் போக்கவிரும்பித் தன் தாதியை நோக்கித் தன்னிருமக்களையும் உடனழைத்து அச்சாரதியின் திருமுன்பு நிற்கக் கடவாய் என்று பணித்த மொழிக்கு ஊனம் வாராது தோழி யவ்வாறே செய்யத் தன மக்கள் மேலிருந்த அன்பின் முதிர்ச்சியால் நளன் தன் இருகண்களிலிருந்து நீர் சொரியவும் அடக்கப் பொறானாய்

*மகனே முன் காணு மனமடுக்கா வெய்துயிராப்*
*புக்கெடுத்து வீமபுய மணையா—மகவான் நீர்*
*என்மக்கள் போல்வன்றி யார்மக்கள் என்றுரைத்*
*வன்மக் களயானை மன். [நான்*

என்று அன்பின் முதிர்ச்சியால் வாய்விட்டுக் கதறினன் அன்றோ! அத்தகைய அன்பின் தன்மையைத் தங்களிடத்துக் கைவிடாது பாதுகாப்போர் தங்களுயிரையுந் துறக்கத் துணிவார்கள். ததீசி, சிபி முதலிய சரிதங்களை இதற்கு ஆதாரமாகக் கொள்ளின் தகும்.

இவ்வாறாக அன்பின் திறனை யுன்னி யுன்னி மறதொழில்களை யறவேயொழித்துப் பிறவுயிர்கள் மாட்டு யாதொருஇன்னலுறுமநிலையிலும் நற்காரணத்தைக்கொண்டு துன்ப மியற்றாது அன்பாகிய போர்வையைச் சதாகாலமும் அணிந்து வாழ்வோமானால் பிறவுயிர்களுக்கு ஊனமேனிடக்கூடாதென்ற பெருங்கருணையினால் தனக்கு ஆபத்து விளையும் என்பதையும் யோராமல் ஆலகால விடத்தை யுண்டருளிய சர்வலோக நாயகனாகிய பரமசிவனது பொற்பமைந்த திருவைக்குப் பாத்திரராகி, இம்மையில் அளத்தற்கரிய சுகத்தையும், மறுமையில் பேரின்ப சித்தியும் எளிதில் கைகூடும் என்பது திண்ணம். பூவார்க்கொன்றை புண்ணியராம் புங்கவன் நமக்குக் கடிதே தண்ணளி தயங்காது புரிவாராக.

M. சுந்தரவடிவேல் முதலியார், திருமயிலை.

---

## அறம்

(௱௪௮-ம் பக்கத் தொடர்ச்சி)

அதர்மத்தால் பிறன் பொருளை அபகரித்து அப்பொருளைக் கொண்டு தருமம் செய்தால், தருமம் பொருளுக்குரியார் மேலும் பாவம் பொருளைத் தருமத்துக்கு உபகரித்தார் மேலும் நிற்கும். ஆகையால் அறஞ்செய்ய முற்படுவோர் நல்வழியில் ஈட்டிய தங்கள் பொருளை உபகரிப்பார்களேயானால் தருமம் அழிவுறாது நிலைபெற்று உலகத்தாரால் கொண்டாடப் பெற்று மேன்மையடையுமென்பதில் ஐயமின்று. பாவ வழியில் ஈட்டிய பொருளைத் தருமம் செய்தால் அத்தருமம் நிலைபெறுமல் உலகத்தாரால் இகழப்பட்டுத் தருமம் செய்தானுக்கும் நற்பெயரின்றி அத்தருமம் சிதைதல் திண்ணம். எனவே எவரும் நல்வழியில் பொருளை யீட்டித் தருமம் செய்தல் வேண்டும் என்னும் முடிவு கிடைக்கிறது.

தருமம், அறம், கொடை, ஈகை, வண்மை என்பன ஒரு பொருட் கிளவிகள். ஆயினும் ஒவ்வொன்றுக்கும் சிறிது சிறிது பொருட் பேதம் உண்டு என்பர்.

மனித யாக்கையைப் பெற்ற நாம் ஒவ்வொருவரும் தன்னுயிரைப்போல் மற்றைய உயிர்களையும் பாவித்து அவற்றிற்கு நேரிடும் இடுக்கண்களைத் தனதெனக் கருதித் தன்னாலியன்றவரையில் மனம், வாக்கு, காயத்தினால் உதவிபுரிந்து வரவேண்டியது.

குருடர், முடவர், சிறு குழந்தைகள், தரித்திரர், வியாதியாளர், வயோதிகர், ஆதரவற்றவர்கள், அடியார்கள் முதலியவர்களையே தெரிந்து அறஞ்செய்தல் நன்று.

சோப்பேறிக்கும், பொன்னாசையினால் தரும வேடங்களைக் காட்டி மனிதர்களை வஞ்சிப்போனுக்கும், மதுபானஞ் செய்வோனுக்கும், புறங் கூறுவோனுக்கும், பெரியோரை நிந்திப்போனுக்கும், கொலை செய்வோனுக்கும், மாதா பிதாக்களைப் பேணாதோனுக்கும், கடவுளை நிந்திப்போனுக்கும் கள்வனுக்கும், குருத்துரோகிக்கும், பொய்யனுக்கும், செய்நன்றி கொன்றோனுக்கும், புராண சரிதங்களை நிந்திப்போனுக்கும் தருமம் செய்தலில் பாவம் சித்திக்குமேயன்றி சிறிதும் பலன் அடைதல் முடியாது. இனையோர்க்குப் பொருளுதவி செய்தல் குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டார் கதையை ஒக்கும்.

செல்வம் மிகவுடையார்களில் பலர் உண்ணல், ஆபரணந்தரித்தல், உடுத்தல், வாகனமேறல், கீதங்கேட்டல், கூத்து பார்த்தல் இவைகளே மனிதப் பிறப்பாலாகிய பயனென நினைந்து, தங்கள் பொருள்களை எல்லாம் அவைகளின் பொருட்டே செலவு செய்கிறார்கள். விவாகம் முதலிய சடங்குகளில் வீண் செலவு அதிகம் செய்கிறார்கள். ஆயினும் ஆதரவற்று வந்தடைந்த அதிதிக்கு ஓர் பருக்கையுங்கொடுக்க அஞ்சுகிறார்கள். என்னே துன்பம்! என்னே துன்பம்! இவர்கள் கூற்றம் பிடரிக்கண் உளான் என்பதையும், செல்வம் நில்லா வென்பதையும் அறவே மறந்தார்கள் போலும்; அதோடல்லாது,

"புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி இன்னினியே செய்க அறவினை"

"இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையான் மருவுமின் மாண்டார் அறம்"

என்பனவற்றையும் இன்னும் இதுபோன்ற பல பெரியோர் மொழிகளையும் சிறிதும் அறியார் என்பது நிச்சயம்.

நமது தெய்வப்புலமை திருவள்ளுவனார் புகழைச் சிறப்பிக்க முன்வந்தபோது "வறியார்க்கு ஈதல் அதனால் உண்டாகும் புகழை அடைந்து வாழ்தல் என்னும் புகழல்லது வேறுபயன் ஒன்றுமில்லை" என்னும் பொருள் தரும்படி,

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்று உரைத்தது நமது கொள்கையை மிகவும் வலியுறுத்துகிறது.

அறஞ் செய்வான் கருதி முன்வருவோன் ஜீவகாருண்யம், நன்மனம், கொடை, வணக்கம், பொறை என்னும் இவ்வைந்தினையும் உடைத்தாயிருத்தல் வேண்டும். பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் என்பனவற்றை அறவே ஒழித்தல் வேண்டும். அதோடல்லாது,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற"

என்னும் நாயனார் வாக்குக்கிணங்க மனம் மாசிலாதிருத்தல் வேண்டும். பிறன் அறிவான் பொருட்டு தருமம் செய்தல் கூடாது. அஃதோடுமல்லாது,

"வறியார்க் கொன்றீவதே ஈகை மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீர துடைத்து."

என்னும் பொய்யா மொழிக்கும் இணங்க வறிஞருக்கே ஈதல் வேண்டும். கொள்பவனால் ஒருவித பிரதி பலனையும் நாடாதிருத்தல் வேண்டும்.

இத்தகைய சிறப்புவாய்ந்த தருமத்தினை நம் செங்குந்த குலமக்கள் செய்து முன்னேற்றமடைய எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் சுரப்பானாக.

க. ஊத்தீஸ்வரபாரதி முதலியார்,
அமைச்சர், செங்குந்த சைவசித்தாந்த சபாஜம்,
கண்டாச்சிபுரம்.

---

## செங்குந்தர்களுக்கோர் விண்ணப்பம்.

மங்குந்தன் புகழ்மேலாக்கா நற்குலமாம் மருளறையித்
செங்குந்தர் சீர்பாத்யுஞ் சண்முகஞ்சேர் சுந்தரும்
எங்குந்தன் புகழ்பரப்பு வழிசபையின் பதியவரும்
பொங்குந்தன் மதியனைத் பொலிவுமிகு துலக்க [முறத்
செங்குந்த மித்திரனுஞ் சீர்விளக்கை யேற்றிலைத் [தார்
செங்குந்த வேளர்களே! செம்மையுற அவ்விளக்கை
எங்குந்தன் ஒளிவீசச் சந்தாவாம் எண்ணெயினைத்
தங்குதடை யில்லாது தாட்டியமா யூற்றுமினே.

ஜெ. தங்கவேல்,
எப்.ஏ., வகுப்பு மாணவர்,
இராஜதானிக் கல்லூரி, சென்னை.

---



# தொழிற் பகுதி.

## தொழிலும் அதன் தருமமும்

தொழில் என்பதற்கு வேலை எனப்படும். தொழில்களில் பலவிதம் உண்டு. கைத்தொழில், பயிர்தொழில், இதர தொழில்கள் எனப்படும். எல்லாவற்றிலும் கைத்தொழிலே சிறந்தது. கையினால் செய்யப்படும் எல்லா தொழில்களும் கைத்தொழில் எனப்படும். மனிதர்களுக்கு மிக்க முக்கிய ஆதாரவாயும் மானத்தைக் காக்க கூடியதாயுமிருக்கும் தொழிலே மிகச் சிறந்தது. அஃது நெசவுதொழில்.

சிறந்த பருத்தியைக் கொண்டு செம்மைப்படுத்திக் கையினால் செய்யப்படும் இயந்திரங்களினால் நூற்களை நூற்றுப பக்குவமாக இழைகளாகச் செய்து பின்னால் பலவித வஸ்திரங்களாகவும் செய்து விற்பனைக்குக் கொண்டுவந்து அதனால் உண்டாகும் ஊதியத்தைக்கொண்டு ஜீவிப்பதே மிகச் சிறந்தது பட்டாடையை விட பருத்தி ஆடையே மிகச் சிறந்தது.

எல்லாச் செல்வங்களிலும் மிக உத்தமமான செல்வமும் தொழிலுமாயது பயிர்த்தொழில் இதைக்குறித்து நமது மூதாட்டியார் "மேழிச் செல்வம் கோழை படாது" என்றார் ஆனால் இதற்கு அடுத்த படியிலுள்ள கைத்தொழில் மிகச் சிறந்ததாகிய இந்த நெசவுத் தொழிலே தவிர வேறன்று. இதனால் யாதொரு பாபகாரியங்களைச் செய்யாமலும் இதாருடைய மனத்தைச் சந்தோஷிப்பதுமாகின்றது. ஆகலால் இதர கைத்தொழில்களைகாட்டிலும் இதுவே மிகச் சிறந்தது மற்றவைகளை யெல்லாம் இதன் பின்னால் வைக்கவேண்டும்.

ஒருவன் தான் செய்யும் கஷ்டத்திற்கு பலன் கொடுப்பது இஃதே ஆதலால் தன்னால் இயன்றமட்டும் இதில் துணிவுற்றுச் சதா இத்தொழிலைச் செய்து ஜீவிப்பார்களானால் யாதொரு கஷ்டமின்றி இப்பூலோகத்தில் உள்ள வரையில் சதானந்தவாழ்வை அனுபவிப்பதற்கு ஐயமே இல்லை. இதைப்பற்றி நமது பெரியோர்களாகிய திருவள்ளுவரும் ஒட்டக் கூத்தரும் ஸ்லாகித்து அனுபவத்தின்கீழ் எழுதியது மிகச் சிறந்தது. இதை நம்முடைய ஜீவகாலங்களில் ப்ரத்யக்ஷமாகக் காணலாம்

ஆகலால், பெரியோர்களே, அன்பர்களே! தொழிலால் வரும் லாபத்தைக்கொண்டு செய்யும் தருமமே சிறந்ததென்று நமது திருவள்ளுவர் பின் வருமாறு எழுதுகிறார்.

"அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்"

இதனால் நமக்குக் கருணைகடலாகியும் திரிகால ஞானியும், திரிகால சக்தியும் வாய்ந்த நமது எம்பிரான் முருகப்பெருமான் அருளை வாய்ந்தவர்களாக ஜீவர்களாக இப்புவனத்தில் நீடூழிகாலம் வாழ்ந்திருப்பதற்கு ஐயமே இல்லை. எல்லோரும், இத்தகைய அறத்தொழிலைச்செய்து உலகத்திற்கு நன்மை உண்டாக்குவீரென யான் மிகவும் வேண்டுகின்றேன்.

கா. ல. முனியப்பமுதலியார்,
சோளிங்கிபுரம்,

## நிருபங்கள்.

### உறங்கும் சங்கம்

நீண்ட நாள் உறங்கிக்கிடந்த நம்குலம் சிறிது விழித்து வருகின்றது. இதற்குச் சாதகமாய் இருப்பன அவ்வவ்விடங்களில் நம்குல மக்களிடையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்களேயாம். இச்சங்கங்கள் முழுமனதுடன் சமூகத்திற்குப் பாடுபட்டாலன்றி அவைகளால் யாதொரு பயனுமில்லை. எனினும் ஸ்தாபிக்கப்பட்ட சில நாட்களிலேயே இரண்டொரு சங்கங்கள் உறங்கத் தொடங்கிவிட்டன. இப்படி உறக்கங்கொண்டிருக்கும் சங்கங்களில் எங்களூர் சங்கமும் ஒன்று. சங்க நிர்வாக அங்கத்தினர்கள் சங்க அபிவிர்த்தியின் பொருட்டாவது அல்லது சமூக முன்னேற்றத்தின் பொருட்டாவது ஊக்கங்கொண்டு பாடுபடுவதைக் காணோம். கூட்டங்கள் நடைபெறுவதே கிடையாது,

இதற்கு காரணங்கள் சில உள. எங்களூர் செங்குந்தர்கள் சிலர் இவ்வூரிலுள்ள போலிகள் சிலருடன் பழக்கங் கொண்டிருப்பதால் தாங்கள் சங்கத்தின் சார்பாக உழைப்பின் அன்னோர்க்கு மனத்தாங்கல்கள் ஏற்படும் என்ற எண்ணமும் அவர்களில் இரண்டொருவருடைய விரோதத்தைப் பெற வேண்டிநேரிடும் என்ற பயமும் கொண்டிருக்கிறார்கள் என்றெண்ணுகிறேன். இம்மாதிரி தங்கள் சமூக நன்மையைப் பிறர் பொருட்டுக் கைவிட்டுவிடுதல் சங்க அங்கத்தினர்களுக்குச் சிறிதும் ஒவ்வாது. போலிகளோ நம் கிளர்ச்சியையும் நம்குலத்தையும் பலவாறு தூற்றி எள்ளி நகையாடுகின்றனர். இவைகளை நம் சங்கத்தார்கள் கவனித்தார்களில்லை இஃது மிக்க விசனிக்கற்தக்க காரியமேயாகும். 'எண்ணித் துணிக்கருமம் துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு". என்று பொய்யா மொழிப் புலவர் அமுதமொழிக்கிணங்க, இவர்கள் சங்கத்தை இறவு முன்னரே தாங்கள் எவ்வளவுதூரம் பாடுபட முடியும் என்று தெரிந்து இதில் பிரவேசித்திருக்கலாம். அப்படியன்றி எடுத்த காரியத்தை இனிது முடிக்காது விடுதல் வருந்தத்தக்க செய்கையாகும்.

நம் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதில் நாம் பிறர் பொறாமைக்கும் பழிப்பிற்கும் நாம் ஏன் அஞ்சவேண்டும்? இதனால் நான் போலிகளை வெறுக்கவேண்டுமென்றாவது அவர்களுடன் பழகலாகாது என்றாவது கூறவில்லை. நான் சொல்வதெல்லாம் அப்பழக்கங் காரணமாகவோ, பயம் காரணமாகவோ, சுயநலம் காரணமாகவோ நமது குலத்தைக் காட்டிக்கொடுக்கவேண்டாம் என்பதே. அதுவும் குலத்திற்காகப் பாடுபடுகிறேன் என்று முன்வந்து சங்கம் ஸ்தாபித்துப் பின்வாங்குதல் பழிப்புக்கிடமாகும்.

நிற்க, நம் சங்கத்தின் வேலை போலிகள் நம்மைப்பற்றிக் கூறுவதைக் கண்டித்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல. செங்குந்த மக்கள் கல்வி, கைத்தொழில் வியாபாரம், ராஜீயம், ஒழுக்கம், பெண் கல்வி முதலிய துறைகளில் முன்னேற்றமடையப் பாடுபடவேண்டும். நம் சங்கங்கள் இவைகளைப் பிரதானமான வேலைகளாகக் கொள்ளவேண்டும். இக்காரியங்கள் செல்வதில் யாருக்கு நாம் பயப்படவேண்டும்? ஆகையால் எங்களூர் செங்குந்தர்களே, சங்க நிர்வாகிகளே, எழுமின்! விழிமின்! கருதிய கருமம் கைகூடுமாறு உழைமின்!

2—6—28. மு. கணபதி முதலியார்.

## திருநெல்வேலி செங்குந்த மாணவர் சங்கம்.

அன்பார்ந்த ஐயா,

எங்கள் சங்கம் சுமார் இரண்டு வருஷகாலமாக நடந்து வருகிறதென்றும், ஷை சங்கத்தின் மூலாதாரப் பண்டுக்காக ஒரு லாட்டரி சீட்டுச் சொற்ப தொகைக்குள் நடத்தப்படுகிறபடியால் அதைச் செங்குந்த நேயர்கள் யாவரும் ஆதரிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்களென்றும், தாங்கள் நம்குல சமுதாய பிரசாரஞ் செய்துவரும்போது தங்களை வரவேற்க நேர்ந்த பாக்கியம் அளவற்ற சண்முகப்பெருமான் திருவருளாலென்றும், தாங்கள் எங்கள் மத்தியிலிருக்கும்படி கிடைத்த அவகாசம் மிகச்சிறிதேயாயினும் அதன் பயன் சாலச்சிறந்ததென்றும்—உதாரணமாக, நெடுநாளாய் உறங்கிய சங்கங்கள், உயிரற்றுவாளாவிருந்த சீதாப்பிராட்டியார் ஸ்ரீராமபிரான் தூதனும் ஹனுமானைக் கண்டதும உற்சாக மடைந்ததுபோல, உயிர்த்தனவென்றும், ஆகையால் செங்குந்த வுலகம் உள்ளளவும் தங்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டதெனறும், தங்களைப்போன்ற தன்னயத்தியாக சுபாவமுள்ள குலாபிமானிகள் பலர் முன் வந்து நம் குலத்துக்குத் தூண்டுகோலாய் விளங்கி நாமுய்யுமாறும், இவற்றிற்கு முதற்காரணமாக விளங்கும் தங்களுக்கு நீடிய ஆயுளும், போதிய அபிவிருத்தியும், உற்சாகமும் கொடுத்தருளும்படியாகவும எல்லாம் வல்ல நம் குல வள்ளலாம் குமரனைப் பன்முறைப் பிரார்த்திக்கிறோமென்றும், தாழ்மையாய் ஷை சங்கத்தின் சார்பாகத் தெரிவித்துககொள்ளுகிறேன்.

ஷை சங்கத்தின் அங்கம்

தலைவர்—S. பாக்கிய முதலியார் B. A., L.T.
ஹெட்மாஸ்டர், C.M.S. ஹைஸ்கூல்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

காரியதரிசி—D. முத்தையா—மாணவர்
பொக்கிஷதார்—.. இராமசாமி ,,
பரிபாலனசபையார்—.. செல்லநாயகம் ,,
S. .. ணபதி ,,
. S. முத்தையா
K. P. சபாக லிங்கமுதலியார்
S. N. .. சிவாயமுதலியார்

அங்கத்தினர்—சுமார் 20 மாணவர்.

திருநெல்வேலி, 24—6—28. D. முத்தையா, காரியதரிசி.



129803

# செங்குந்தர் கிளர்ச்சி

## மதுரையில் கிளர்ச்சி.

### மதுரை செங்குந்தர் சங்கம்.

### சென்னைத்தலைவர்கள் விஜயம்.

நமது தலைச்சங்கத்துப் பிரமுகர்களான திருவாளர்கள் கனம் ம. சண்முகசுந்தரமுதலியாரவர்களும் கனம் மா. அ. கனகசபை முதலியாரவர்களும்,மதுரைக்குப் பிரசார நிமித்தம் 4-6-28 மாலை வந்தனர். மதுரைச் செங்குந்தர்கள் அப்பெரியோர்களை ஸ்டேஷனில் கண்டு வரவேற்றனர். முன்னமேயே செய்த ஏற்பாட்டின்படி தத்தம் குடும்பத்தாருடன்வந்த அவ்விரு தலைவர்களுக்குத் திரு சி. ராம. சுந்தரமுதலியாரவர்களது இல்லத்தில் வேண்டிய வசதிகள்செய்து கொடுக்கப்பட்டன. அன்று இரவு வெகுநேரம் வரை சங்க விஷயமாய் தலைவர்களுடன் நமது வாலிபர்கள் பேசிக்கொண்டிருந்தனர். மறுநாள் 5-6-28 அன்று மாலை தலைவர்கள் செங்குந்த ஜவுளி வர்த்தகர்கள் ஒவ்வொருவரிடமும் சென்று சங்கம் பத்திரிகை இவற்றின் அவசியங்களை எடுத்துக் கூறிச் சந்தா பாக்கிகளை வசூலித்துக்கொண்டு திரும்பினர்.

அடுத்தநாள் 6-6-28 அன்று, தற்சமயம் இரு சங்கங்களாகப் பிரிந்து வேலை செய்யும் "செங்குந்த முதலியார் மகா ஜனசங்கம்" "செங்குந்தமுதலியார் வாலிபர் சங்கம்" இவற்றை ஒன்று சேர்ப்பான் வேண்டி அரிய முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. யாவர்க்கும் சௌகரியமாக திருவாப்புடையார் கோவில் மண்டபத்தில் இரவு 9-30 மணிக்குத் திரு. க. சி. நல்லதம்பி முதலியார் அவர்களது அவைத் தலைமையின்கீழ்ச் செங்குந்தர் கூட்டமொன்று கூடியது. திருவாளர் K. பழனிச்சாமி முதலியார் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபித்தார் "குல ஒற்றுமையை முன்னிட்டு நமது செங்குந்த முதலியார் மகா ஜனசங்கமும், செங்குந்தமுதலியார் வாலிபர் சங்கமும் ஒன்றாக இணைக்கப்பட்டு அதற்கு 'மதுரைச் செங்குந்தர் சங்கம்' எனப் பெயரிடுதல்வேண்டும்." இத்தீர்மானத்தை திரு. சி. ரா.ம. சுந்தரமுதலியார் ஆமோதிக்க யாவராலும் ஏகமனதாக அங்கீகரிக்கப் பட்டது. கீழ்க்கண்ட கனவான்கள் உத்தியோகஸ்தர்களாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர்:—S. சாமிமுதலியாரவர்கள்.
உபதலைவர்:— சி. ராம. சுந்தரமுதலியாரவர்கள்.
காரியதரிசிகள் :—S. மாணிக்க முதலியார், P. V. முத்துக்கருப்ப முதலியார்.
பொக்கிஷதார் :— தலைவர்.
நிர்வாக சபை அங்கத்தினர்கள் :—ராம. சு. ஆறுமுகமுதலியார்—அனுப்பாண்டி ; க. சி. நல்லதம்பி முதலியார், மு. முத்திருளமுதலியார்—தல்லாகுளம் ; கு. இருளாண்டி முதலியார்—திருவாப்புடையார்கோவில் ; சி. ம. கந்தசாமிமுதலியார்—மதிச்சயம்.

இன்னும் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. இச்சங்கத்தைச் சென்னைத் தலைச்சங்கத்தின் அங்கமாக்குதல்.

2. தலைச்சங்கத்திற்கு வருடக் கட்டணம் ரூபாய் 10 செலுத்துதல்

3. இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் வருஷ சந்தா ரூபாய் 1 செலுத்துதல்.

4. மதுரை நகர பரிபாலன சபையில் தற்காலம் நம்மவர்க்குப் பிரதிநிதித்துவம் இல்லாததால் அதை உடனே நம்மவர்க்கு வழங்கவேண்டுமென கனம் மந்திரியவர்களையும் ஜில்லா கலெக்டரவர்களையும்வேண்டிக் கொள்ளுதல்.

5. மேற்கண்ட தீர்மானத்தை அனுசரித்து நம் வகுப்பினர்களில் முக்கியஸ்தரும் குலாபிமானமிகுந்தவருமான திரு. சி. ராமசுந்தர முதலியாரவர்களை நம்மவர் பிரதிநிதியாக நியமித்தல் வேண்டும்.

6. இத்துடன் சென்னைத் தலைச்சங்கத்துப் பொதுக் கூட்டத்திற்குத் திருவாளர்கள் S. சாமிமுதலியாரையும் P. V. முத்துக்கருப்ப முதலியாரையும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

இறுதியில் மாணவர் M. அங்குசாமி வந்தனோபசாரம் கூறுகையில் இரண்டு சங்கங்களையும் ஒன்று

பவித்தி அதனால் விளையும் அளவற்ற பயனுக்குக் காரண புருஷர்களான கனம். ம. சண்முகசுந்தர முதலியாரவர்களுக்கும் கனம் மா. அ. கனகசபை முதலியாரவர்களுக்கும் செங்குந்தர்கள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளார்களென்றும் அதுபற்றி சங்கத்தின் சார்பாகத் தனது மனமார்ந்த நன்றி யறிதலையும் வந்தனத்தையும் அளிப்பதாகச் சொல்லி யமர்ந்தார். பின் தலைவர்கட்கு பூமாலை சூட்டப்பட்டது.

சென்னைக் கனவான்களிருவரும் இம்மதுரைச் சங்கத்திற்கு புத்துயிரளித்ததோடல்லாது பலத்த சமூக உணர்ச்சியையும் கிளர்ச்சியையும் உற்சாகத்தையும் மதுரைச் செங்குந்தர்களுக்கு ஊட்டியிருப்பது போற்றற் பாலது. செங்குந்த குலமக்களே விழிமின் என சங்க காரியதரிசிகள் எழுதுகின்றார்கள்.

## மதுரை செங்குந்தர் சங்க வாசகசாலை திறப்பு விழா.

இகழும் விபவஹு ஆனி ௴ 18உ வியாழக்கிழமையன்று இரவு 7-மணிக்குச் செங்குந்தர் பொதுக்கூட்டமொன்று தல்லாகுளம் செங்குந்த விநாயகராலயத்தில் மதுரைச் செங்குந்தர் சங்க ஆதரவின் கீழ்க் கூடியது. அதுகாலைச் சென்னையிலிருந்து இவண் போந்திருந்த சென்னைத் தலைச்சங்க உதவிப் பொருட் காப்பாளரும் பிரசாரகருமான திரு. மா. அ. கனகசபை முதலியாரவர்கள் இவ்விழாக் கொண்டாட்டத்திற்கு அவைத்தலைமை பூண்டனர். பின் நம் குலக் குலகுருவாயாசர் பெருமானுடைய ஒட்டக்கூத்தரது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து நிவேதன ஆராதனைகள் நடாத்தப் பட்டன. பிறகு நம்மவர் மிகுதியும் கல்வியில் பிற்போக்குற்றிருப்பதை எடுத்துக் காட்டி அக்குறையை நிவர்த்திக்க வாசகசாலை யொன்றிருத்தலின் அவசியத்தைப் பற்றி மாணவர் அங்குசுவாமி கூறி, இவ்வாசக சாலையைத் திறந்து வைக்குமாறு தலைவரவர்களை வேண்டிக் கொண்டனர். தலைவரவர்கள் வாசக சாலையைத் திறந்து வைக்குமுன், முன்னுரையாக, "வாசகசாலையின் ஆவசியம்," "நம்மவர் தற்கால நிலைமை" என்பனபற்றி மிக்க அநுகூலத்த தக்க மேற்கோள்களுடன் நிரல்படக்கோத்து யாவர் மனத்தும் பசுமரத்தாணி போல் பதியுமாறு 2 மணி நேரம் வரை பேசினார்கள் பின் எல்லோரும் எழுந்து நிற்க அவ் வாசக சாலையைப் பலத்த கரகோஷத்தினிடையே திறந்து வைத்தனர். அதன் பின் வாசகசாலையில் வைக்கப்பட்ட முக்கிய நூல்களை எல்லாம் பார்வையிட்டனர். பிறகு கீழ்க்காணும் தீர்மானங்கள் பிரேரேபிக்கப்பட்டும் ஆமோதிக்கப்பட்டும் ஏக மனதாய் நிறைவேறின.

1. இவ்வாசக சாலையை நம் சங்க ஆதரவில் நடத்துவது.

2. தமிழ்த் தினசரி, வாரத்திர, மாதாந்திரப் பத்திரிகைகளைத் தருவித்தல்.

3. வாசக சாலையின் நிர்வாகத்தை எப். ஏ. மாணவர் M. அங்குசுவாமி ஏற்றுக்கொள்ளுதல்.

இறுதியில் தலைவரவர்கள் தமது முடிவுரை கூறுமுகத்தான் வாசக சாலையின் அபிவிருத்தியை விரும்பித் தாம் கடவுளை மனமொழி மெய்களால் துதிப்பதாய்க் கூறி முடித்தார்.

கீழ்க்காணும் கனவான்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள பத்திரிகைகளை வாசக சாலைக்குத் தருவித்துக் கொடுப்பதாக வாக்களித்தனர்.

திரு. மா அ. கனகசபை முதலியார், "செங்குந்த மித்திரன்"

,, பி. வீ. முத்துக்கருப்ப முதலியார், "திராவிடன்"

,, என். பாக்கியநாத முதலியார், "ஆனந்த குணபோதினி," "ஆனந்த விகடன்"

பின்பு திரு. S. மாணிக்க முதலியார் விழுமிய பொருளுடனும் செழுமிய சொற்களுடனும் நிரல்பட எழுதிய "செங்குந்தரும் கல்வியும்" என்ற கட்டுரையை மாணவர் அங்குசுவாமி சபையினர்க்கு வாசித்துக் காட்டினர். பிறகு தலைவரவர்கட்குப் பூமாலை சூட்டப்பட்டு சந்தன தாம்பூலம் நைவேத்தியம் வழங்கப்பெற்று வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 11-மணிக்கு இனிது கலைந்தது.

## செங்குந்தர் சங்கம், மதுரை.

நமது சங்கத்தின் முதலாம் ஆண்டு முதற்கூட்டம் சென்ற 11-7-28 புதன்கிழமையன்று இரவு 7-மணிக்குத் தல்லாகுளம் செங்குந்த விநாயகர் ஆலயத்தில் கூடியது. அது காலை நம் சங்கத்தலைவர் திரு எஸ். சாலை முதலியார் அவர்கள் உடல் நலங்கருதித் திருக்குற்றாலம் சென்றிருந்ததால் தல்லாகுளம் உயர் திரு. மு. முத்திருள முதலியார் அவர்கள் அவைத்தலைமை வகித்தனர். கீழ்க்கண்ட குறிப்பில் கண்டவாறு முதலில் மாணவர் அங்குசுவாமியால் கடவுள் வணக்கம் பாடப்பட்டுக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது

பின், சென்ற திறப்பு விழாவன்று நடந்த நிகழ்ச்சி முறைகள் யாவும் காரியதரிசியால் சபையினர்க்கு வாசித்துக் காட்டப் பட்டன. கீழ்க்காணும் தீர்மானங்கள் சபையின் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஏகமனதாய் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டன:—



1. "சங்கத்திற்கு ஏராளமான உறுப்பினர்களைச் சேர்த்தல், சந்தா வசூலித்தல்."

இதற்கு அடியில் காணும் எழுவரடங்கிய சப் கமிட்டி யொன்று ஏற்படுத்தப்பெற்றது.

1. பி. எம். இருளாண்டி முதலியார் } தல்லாகுளம்.
2. மு. முத்திருள முதலியார்
3. கா சங்கிலி முதலியார்
4. எஸ். சாலை முதலியார் (சங்கத்தலைவர்) கோரிப்பாளையம்.
5. எஸ். மாணிக்க முதலியார் } திருவாப்புடையார் கோவிலூர்
6. கு. இருளாண்டி முதலியார்
7. காமாக்ஷி முதலியார் மதிச்சியம்.

(இக்கமிட்டியார் தங்கள் வேலையின் நிவிரத்தைப் பற்றி அடுத்த கூட்டத்தில் ஓர் அறிக்கை சமர்ப்பிக்கக் கடமைப் பட்டுள்ளார்கள்.)

2. "மதுரை அமெரிக்கன் கல்லூரியில் சீனியர் இண்டர்மீடியட் வகுப்பில் வாசிக்கும் நம் குல மாணவர்களாகிய M. அங்குசுவாமி, C. ராமலிங்கம் இவ்விருவரும் உயர்தர கல்வி கற்கப் போதுமான பண உதவியற்றவர்களாயும் தந்தையர்களை இழந்தவர்களாயுமிருப்பதால், அவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துக் கல்வியில் ஊக்கம் தோன்றுமாறு செய்யத் தலைச் சங்கத்தாரை இச்சங்கம் மிகுதியும் வேண்டிக் கொள்கிறது.

பின்னர் காரியதரிசியால் சபையின் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்ட இதர பிரச்னைகளும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன. பின்பு அக்கிராசனருக்கும் சபையினர்க்கும் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு 10-30 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

## இராமநாதபுரம் ஜில்லாவில் கிளர்ச்சி.

### மண்டலமாணிக்கம்

8-6-28 தேதி இரவு 9-மணிக்கு இவ்வூர் பாவடிக்கு எதிரேயுள்ள மடத்தில் செங்குந்த முதலியார் அபிவிருத்தி சங்கம் 3-வது கூட்டம் அருப்புக்கோட்டை யூனியன் போர்டு மெம்பர் ஸ்ரீமான் அ. கு. சி. குழந்தைவேலு முதலியாரவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. உபாத்தியாயர் திரு. சிவகுருநாதனவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் இ. முனியப்ப முதலியாரவர்கள் தலைவரவர்களுக்கு வந்தன உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்துச் சென்ற கூட்டத்தின் நடவடிக்கைகளையும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப்பிரசாரகர்கள் வருகையைப்பற்றியும் வாசித்துக்காட்டினார்கள். பின்பு தலைவரவர்கள் சமூக முன்னேற்றத்துக்கு முக்கியமானது ஒற்றுமை யென்றும், பொறாமை கோபம் முதலிய குணங்களை ஒழிக்க வேண்டுமென்றும் உபன்யசித்த பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

### தீர்மானங்கள்.

1, நமது சங்கத்துக்கு மண்டல மாணிக்கம் செங்குந்த முதலியார் பொதுவிலிருந்து அளித்த நன்கொடை ரூ. 10-0-0 அன்புடன் ஆதரிக்கப்பட்டது.

2. தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தலைவர் அவர்களை எதிர் சென்றழைத்துவரத் திருவாளர் மு. பாதம்பிரிய முதலியாரவர்களை அனுப்பப்பட்டது.

3. செங்குந்த மித்திரனுக்கு சந்தா நேயர்கள் சேகரிக்கவும், தலைச்சங்கத்துக்குக் கட்டணம் ரூ. 10 அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது.

4. தலைவர் குழந்தைவேலு முதலியாரவர்கள் சங்கத்துக்குக் குடியரசு பத்திரிகை வரவழைத்துத்தர வாக்களித்துள்ளார்கள்.

9-6-28 தேதி காலை 11-மணிக்கு நமது தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கப்பிரசாரகர்கள் ஸ்ரீமான் ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல. டி., அவர்களையும் ஸ்ரீமான் மா. அ. கனகசபை முதலியாரவர்களையும் மேளவாத்தியத்துடன் திரளான ஜனங்கள் கூடி எதிர் சென்று வரவேற்றுக் காரில் வைத்து ஊர் கோலத்துடன் அழைத்து வந்து இவ்வூர் பாவடிக்கு எதிரேயுள்ள மடத்தில் சங்கத்தின் சார்பாக அமர்த்தார்கள். அவ்வமயம் ஆண் பெண் இருபாலர்களும் 500 ஜனங்களுக்குமேல் கூடினார்கள். அப்போது பகல் 12-மணி நேரமானதால் சாப்பாட்டு நேரத்தையுத்தேசித்துச் சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் இ. முனியப்ப முதலியாரவர்கள் பிரசாரகரவர்களுக்கு வந்தன உபசாரம் செய்து மாலை 4-மணிக்கு இவ்விடம் பிரசங்கம் நடக்கும் எல்லோரும் வந்து கேட்டு ஆனந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என்று சொல்லி முடித்தபின் பிரசாரகரவர்களுக்கு ஆகாரவசதிகள் நடத்திக் குறித்தநேரத்தில் மடத்துக்கு வந்ததும், இவ்வூர் சிவன்கோயில் தர்மகர்த்தா ஸ்ரீமான் கை. முத்துப்பாண்டிய முதலியாரவர்கள் அவர்களை வந்து சிவன்கோயிலுக்கு அழைத்துச் சென்றார்கள். தரிசனம் செய்து முடிந்த பிறகு மாலை 7-மணிக்கு ஸ்ரீமான் ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ.,எல்.டி. அவர்கள் தலைமையின்கீழ் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. திருவாளர் எம். சிவகுருநாத உபாத்தியாயரவர்களால் கடவுள் வாழ்த்து பாடப்பட்டது. சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் இ. முனியப்ப முதலியாரவர்களால் தலைவரவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பெற்று நீண்ட கரகோஷத்துடன் பூமாலைசூட்ட

ப்பட்டது. தலைவரவர்கள் எழுந்து தனக்கு காரியதரிசியவர்கள் வாசித்துக்கொடுத்த வரவேற்புப் பத்திரத்தைத் தான் ஏற்றுக்கொள்ளத் தகுதியற்றவனென்றும், தான் தொண்டன் ஊழியன் என்றும் சொல்லிமுடித்தபின் சங்க காரியதரிசியவர்கள் சென்ற கூட்டத்தின் நடவடிக்கையைப்பற்றி வாசித்துக் காட்டினார்கள். பின்பு தலைவரவர்கள் சங்கப் புஸ்தகத்தில் கையெழுத்து இட்டுத் தமதாசனமமர்ந்தபின் ஸ்ரீமான் மா. அ. கனகசபை முதலியாரவர்களுக்குக் காரியதரிசியவர்களால் வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுத்து பூமாலை சூட்டப்பட்டது. ஸ்ரீமான் மா. அ. கனகசபை முதலியாரவர்கள் நமது குலமுன்னேற்றம் என்பதைப்பற்றியும், நம்முடைய புகழையும், முதலியார் என்ற பட்டம் வந்ததின் காரணத்தையும் சாஸ்திர மூலமாக அரிய உபந்யாசம் செய்தார்கள். பிறகு சமுத்தி வீராசாமி பாகவதரவர்கள் நம்முடைய வீரத்தன்மையையும் தற்போதுள்ள தாழ்மையையும்பற்றிச் சொல்லி முடித்தபின், ஸ்ரீமான் ம. சண்முகசுந்தரமுதலியாரவர்கள் முதலில் நமது தாழ்மையைப்பற்றியும், பின்னர் நாம் கல்விக் கேள்விகளாலும் ஆசாரத் தொழில்களாலும் கூர்த்த புத்தியினாலும் தாழ்மையடைந்திருப்பதையும், நமக்கு அரசாங்கத்தில் உரிமைகள் வேண்டுமெனவும் உதாரணங்களுடன் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தாற்போல் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இரவு 11-மணிக்குச் சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

மறுநாள் காலை 7-மணிக்குப் பிரசாரகர்கள் ஸ்ரீமான் ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., அவர்களையும் ஸ்ரீமான் கனகசபை முதலியாரவர்களையும் கார் மூலமாக பரமகுடிக்கு பயண உபசாரம் செய்து அனுப்பப்பட்டது.

9-7-28 தேதி இரவு 9-மணிக்கு இவ்வூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்க 6-வது கூட்டம் சங்கத்தலைவர் ஸ்ரீமான் கருணைவள்ளல் மு. ஆ. பாதம்பிரியா முதலியார் தலைமையின்கீழ்க் கூடிற்று. திருவாளர் வெ. மு. கிருஷ்ண முதலியாரவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டது. சென்ற கூட்டத்தின் தீர்மானப் பிரகாரம் காரியதரிசி திருவாளர் இ. முனியப்ப முதலியாரவர்களால் சங்கத்தின் சட்டதிட்டங்கள் எழுதிவந்து வாசிக்கப்பட்டது. உபதலைவர் ஸ்ரீமான் மு. பாதம்பிரியா முதலியாரவர்களால் இக்கிளைச் சங்கத்தின் பிரவேசக் கட்டணம் ரூ. 10 தலைச்சங்கத்துக்கு கூடியசீக்கிரம் அனுப்பித் தரவேண்டுமென்றும், இவ்வூர் போர்டு இந்து ஆண் பாடசாலையில் நம் செங்குந்த மாணவர்கள் 90% வாசித்து வருவதால் இவர்களுக்கு நெசவுத்தொழில் சொல்லிவைக்க நமது தலைச்சங்கத்தின் மூலம் தாலூக்கா போர்டுக்கு எழுதவேண்டுமென்றும் சொல்லப்பட்டது. பிறகு தலைவரவர்கள் ஒவ்வொரு கூட்டத்திற்கும் சங்கத்தின் அங்கத்தினர்கள் தவறாமல் வந்து சேரவேண்டுமென்றும் சந்தாக்களைக் கூட்டத்தன்று எல்லோரும் கொண்டுவந்து கொடுக்கவேணுமென்றும், சங்கத்தின் சட்டதிட்டங்களின் பிரகாரம் எல்லோரும் நடக்கவேண்டுமென்றும், தான் இச்சங்கத்துக்குச் சுதேசமித்திரன் வாரம் மும்முறை பத்திரிகை தருவித்துக் கொடுப்பதாயும், சங்கத்தின் நிர்வாகசபைத்தலைவர் ஸ்ரீமான்கள் இ. ம. இளையபெருமாள் முதலியாரும் உபதலைவர் ச. பா. பொன்னுசாமி முதலியாருமாக இருக்கவேண்டுமென சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மங்களகரமாக இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிதுகலைந்தது.

இ. முனியப்ப முதலியார்,
காரியதரிசி.

## திருநெல்வேலி ஜில்லாவில் கிளர்ச்சி.

### வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் 11வது ஆண்டு நிறைவுவிழா.

இம் மாதம் ஜூலை மீ 17உ மஹா சபா ஹாலில் மிகவும் விமரிசையாய் நடைபெற்றது வருஷாந்தர விழாவுக்காகப் பந்தல்களாலும் தோரணங்களாலும் சங்கக் கட்டடம் அலங்கரிக்கப் பட்டிருந்தது. காலை 8½மணிக்குச் சென்னை செங்குந்தமித்திரன் ஆசிரியரும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் காரியதரிசியுமான ஸ்ரீமான் M. சண்முக சுந்தர முதலியார் எம்.ஏ. எல் டி., அவர்களும், ஸ்ரீமான் கனகசபை முதலியார் அவர்களையும் சங்கத்தின் தலைவர் M. கணபதி முதலியார் பி.ஏ., அவர்களும், உபதலைவர் ஸ்ரீமான் ஆ. மு. ஆறுமுகமுதலியாரவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் வீரவநல்லூர் ரயில்வண்டி நிலையத்தில் வரவேற்றார்கள்.

காலை 9 மணிக்கு அம்பாசமுத்திரம் வக்கீல் ஸ்ரீமான் கே. எஸ். சுப்ரமண்ய முதலியாரவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் கூடிற்று. கடவுள் துதி பாடிய பின்னர் சபா நாயகர் சங்கஸ்தாபனத்திற்குக் காரணமாயிருந்த காலஞ்சென்ற ஸ்ரீமான் வக்கீல் பூமிநாத முதலியாரவர்கள் சரித்திரத்தையும் சங்கம் நடந்த 11 வருஷங்களாகச் செய்துவந்த வேலைகளைப்பற்றியும் சாங்கோபாங்கமாகச் சொல்லி முடித்தார்கள். பின்னர் ஸ்ரீமான் பூமிநாதசுவாமி தேவார பாடசாலை மாணவர்களான முத்தையா சண்முகம் என்ற இருவர்களும் சிவாலய வைபவங்களிய மூல தரிசனமும் என்பதுபற்றியும், சுவாமிநாதன் செல்லையா என்ற இருவர்களும் விபூதி ருத்திராக்ஷ



மகிமை யென்பதுபற்றியும் கேட்பவர் மனதில் நன்கு பதியுமாறு சம்பாஷணை ரூபமாகப்பேசினார்கள் பின் செங்குந்த வாசகசாலை மாணவர்களுக்கும் தேவார மாணவர்களுக்கும் தின்பண்டமும் புஸ்தகங்களும் பரிசளிக்கப்பட்டு இடைவேளை போஜனத்திற்காகக் கூட்டம் கலைந்தது.

மாலை 2½-மணிக்கு ஸ்ரீமான் சுந்தர ஓதுவாமூர்த்தியவர்களால் ஒரு சங்கீத கச்சேரி இனிமையாக நடத்தப்பட்டது.

4-மணிக்கு ஸ்ரீமான் சண்முகசுந்தர முதலியாரவர்கள் தலைமையில் சங்கத்தின் ஆண்டு நிறைவிழா சங்க ஹாலிலும் வராண்டாவிலும் கூட்டம் மிகவும் நிறைந்திருந்தது. ஸ்ரீமான்கள் சென்னை கனகசபை முதலியார், தென்காசி ப. கு. வேலாயுதமுதலியார், அம்பாசமுத்திரம் ப. ஆ. சுப்ரமண்ய முதலியார் ஷை ஊர் ப. ஆ கணபதி முதலியார் பி. ஏ., வே. கு. குளத்தூரான் முதலியார், கல்லிடைக்குறிச்சி கே. என். சுப்ரமண்ய முதலியார் சேரமாதேவி, சு மா. ஆறுமுக முதலியார், சி. வ சங்கர முதலியார், வீரராகவபுரம் முத்தையா முதலியார் ஆகிய பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள். கோட்டார் ஏ. என். முத்தையா முதலியார் பி. ஏ., வி. பன்னிருகைப்பெருமாள் முதலியார் பி. ஏ., பி. எல், திருநெல்வேலி வக்கீல் பழனியாண்டி முதலியார் பி. ஏ., இவர்களின் கடிதங்கள் ஷை சங்க காரியதரிசி ஸ்ரீமான் க. ஆ. சிதம்பர முதலியாரால் வாசிக்கப்பட்டன.

சபா நாயகரவர்களுக்கு உபசாரப் பத்திரம் ஷை சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் சி. ப. ஆறுமுக முதலியாரால் வாசித்துக் கொடுக்கப்பட்டது. ஷையாரால் வருஷாந்தர ரிப்போர்டு வாசிக்கப்பட்டபின்னர் சபாநாயகர் நமது சமூகம் தற்காலமிருக்கும் நிலைமையைப்பற்றியும், நாம் முன்னேறுவதற்குச் செய்யவேண்டிய முறைகளைப்பற்றியும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் செய்துகொண்டுவரும் வேலைகளைப்பற்றியும் நீண்டநேரம் பிரசங்கம் செய்தார்.

பின்னர் அத்தி தாழநல்லூர் ஸ்ரீமான் பே. முத்தையா முதலியார் ஜீவகாருண்யமென்பது பற்றியும் ஸ்ரீமான்கள் கே. என். சுப்ரமண்ய முதலியார் பி ஏ., கே. வி. எஸ். சங்கரசுப்ரமண்ய முதலியார் பி.ஏ பி.எல். ஆகிய இருவர்களும் நமது சமூகமுன்னேற்றமென்பதுபற்றியும் தெளிவாய்ப் பேசினார்கள். சபா நாயகர் முடிவுரையின் பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:—

1. திருநெல்வேலி ஜில்லாவில் நம்மரபினர் பல வகுப்பாகப் பிரிந்திருப்பதை ஒன்றுபடுத்தி தக்க யோக்யமாய்க் கல்யாண சம்பந்தங்கள் முதலியன செய்யும்படி செய்ய இச்சங்கம் தீர்மானிக்கிறது.

பிரே. ஸ்ரீமான் கே. என். சுப்ரமண்ய முதலியார், ஆமோ. ப. கு. வேலாயுத முதலியார்.

2. நம்மரபினர் அனைவரும் நம்மால் உற்பத்திசெய்யக்கூடிய துணியையே உபயோகிக்க வேண்டியதென்று இச்சங்கம் தீர்மானிக்கிறது.

பிரே. வி. எஸ். சங்கரசுப்ரமண்ய முதலியார்.
ஆமோ. தென்காசி அங்கப்ப முதலியார்.

3. இச்சங்கம் சென்னை கவர்ன்மெண்டாரை நம் மரபினரிலிருந்து ஒருவரைச் சட்டசபை, ஜில்லா தாலூகா போர்டுகள் முனிசிபாலிடிகள் முதலிய பொது ஸ்தாபனங்களில் நாமினேஷன் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரே. ஸ்ரீமான் பி. ஏ. கணபதி முதலியார், ஆமோ. ஸ்ரீமான். கே, என். சுப்ரமண்ய முதலியார்.

4. இச்சங்கம் நமது சமூகத்தாருக்காக உழைத்து வரும் செங்குந்தமித்திரன் என்னும் மாதப்பத்திரிகையை வாரபத்திரிகையாக மாற்றுவதற்காக வேண்டும் முயற்சிகள் எடுக்கும்படி ஸ்ரீமான் சண்முகசுந்தர முதலியார், ஸ்ரீமான் கனகசபை முதலியார் ஆகிய இருவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறது. பிரே. பி.ஏ. சுப்பிரமணிய முதலியார், ஆமோ. ஸ்ரீமான் க. ஆ. சிதம்பர முதலியார்.

5. சென்னையில் செங்குந்தர் மாணவர் விடுதியேற்படுத்தவேண்டுமென்று தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் செய்துவரும் முயற்சி மிகவும் அவசியமானதென்றும் அதற்கு வேண்டிய உதவி செய்யவேண்டுமென்றும் இச்சங்கம் தீர்மானிக்கிறது.
பிரே. வி. எஸ் சங்கரசுப்ரமண்ய முதலியார்.
ஆமோ. பி ஏ. கணபதி முதலியார்.

6. இச்சங்கத்தைத் தென்னிந்திய செங்குந்த மகாசங்கத்தோடு இணைக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது. பிரே ஸ்ரீமான் கே.என். சுப்ரமண்ய முதலியார் ஆமோ. ஸ்ரீமான் சி. ப. ஆறுமுக முதலியார்.

பின்னர் தலைவர்களுக்கு வந்தன உபசாரம் சொல்லிப் பூமாலை சூட்டுவித்துத் தாம்பூலம் வழங்கப்பட்டு 9½ மணிக்குச் சபை இனிது கலைந்தது.

சி. ப. ஆறுமுக முதலியார்,
காரியதரிசி.

## செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், வீரவநல்லூர்.

இச்சங்கத்தின் மெம்பர்கள் ஷை சங்கத்தின் முக்கிய மெம்பரான ஸ்ரீமான் வி. எஸ். சங்கர சுப்ரமணிய முதலியார் பி.எல். பரீக்ஷையில் தேறினதை உத்தேசித்து ஜூலை மீ 1௨ மாலை 5-மணிக்கு ஒரு தேநீர் விருந்து நடத்தினார்கள். விருந்து நடந்த பின்பு திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் எஸ். பழனியாண்டி முதலியார் தலைமையில் ஒரு கூட்டம் கூடிற்று. தலைவரும் சில முக்கியஸ்தர்களும் அவருடைய குணங்களைப் புகழ்ந்து பேசிய பின் பூமாலை சூட்டப்பெற்று கூட்டம் இனிது கலைந்தது.

இச்சபையில் 12-வது ஆண்டு முதலாவது கூட்டம் 13-7-28 மாலை 6-மணிக்கு ஷை சங்க ஹாலில் ஸ்ரீமான் ஆ. மு. ஆறுமுக முதலியார் தலைமையின் கீழ் கூடிற்று. கடவுள் வணக்கம் பாடிச் சென்ற கூட்ட நிகழ்ச்சியை வாசித்தபின் தலைவர் முன்னுரைக்குப்பின் ஸ்ரீமான் ஆதிநாராயண பிள்ளையவர்களால் பிரார்த்தனை செய்வதைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்ந்தது. பின் தலைவர் பின்னுரையில் பிரார்த்தனை செய்வதைப்பற்றித் தெளிவாய்ப் பேசினார்கள். வாழ்த்துப்பாடிச் சபை இனிது கலைந்தது.

ஊர்க்கு வாலிபர் சங்கம் முதலாவதாண்டு 15-வது கூட்டம் ஸ்ரீமான் கா. சுப்ரமணிய முதலியார் தலைமையில் கூட்டப்பட்டது. வேதம்பாடி நிகழ்ச்சி வாசித்தபின் தலைவர் முன்னுரை பேசிய பின் ஸ்ரீமான் பி. சுப்பையா பிள்ளை புலால் மறுத்தலைப்பற்றித் தெளிவாய்ப் பேசினார். தலைவர் பின்னுரை முடிந்து சபை கலைந்தது.

ஆ. மு. ஆறுமுக முதலியார்,
உப தலைவர்.

## செங்குந்தர் சங்கம், அம்பாசமுத்திரம்.

29-6-28 வெள்ளிக்கிழமை இரவு 8-மணிக்கு ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் கோவில் சன்னதி மணிமண்டபத்தில் உள்ளூர் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அவ்வூர் செங்குந்தர் தேவார கோஷ்டி மாணவர்கள் தேவாரம் ஓதக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. திரு. ப. ஆ. கணபதி முதலியார் பி.ஏ., அவர்கள் 'நம குல முன்னேற்றம்,' 'சங்கம் ஸ்தாபிக்க வேண்டிய அவசியம்' என்பவைகளைப் பற்றிப் பேசியபின் ஷை சங்கத்தைத் தாபித்துக் கீழ்கண்ட உத்தியோகஸ்தர்கள் ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்:—

தலைவர்
திருவாளர் ரா. வேலாயுத முதலியார் அவர்கள்

காரியதரிசிகள்

" சிவ. ரா. அருணாசல முதலியார் "
" ப. ஆ. கணபதி முதலியார், பி.ஏ. "
" ஆ. ம. ஆறுமுக முதலியார் "
" ரா. ம. ராமலிங்க முதலியார் "
" கு. சிவராமலிங்க முதலியார் "

பொக்கிஷதார்.

" ஆ. ம. ஆறுமுக முதலியார் "

21 நிர்வாக சபை அங்கத்தினர்.

**தீர்மானங்கள்**

(1) இச்சங்கம் ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை வாரத்தன்று மாலை 5-மணிக்கு ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் கோவில் முன் மண்டபத்தில் கூடவேண்டும்.

(2) சங்க அங்கத்தினர் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு அணா ஒன்று வீதம் சந்தா தொகை செலுத்த வேண்டும்.

தலைவர் உபந்நியாசகர் முதலானவர்களுக்கு வந்தனோபசாரம் கூறி தேவார வாழ்த்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

ரா. வேலாயுத முதலியார்,
தலைவர்.

## திருச்சி ஜில்லாவில் கிளர்ச்சி

### உன்னியூர் செங்குந்தர் சங்கம்.

சென்ற விபவஞூ ஆடி மீ 1௨ (16-7-28) மாலை 4 மணிக்கு உன்னியூர் செங்குந்தர் சங்கக்கூட்டம் திரு. K. மாணிக்க முதலியாரவர்களது மேற்கொட்டகை கொட்டகையில் கூடியது. இக்கூட்டத்திற்கு சங்க மெம்பர்களும் இதர செங்குந்தர்களுமாகச் சுமார் 250 ஜனங்கள் வரை குழுமியிருந்தனர். திரு. R. மாணிக்க முதலியார் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கடவுள் வந்தனம் பாடிய பின், முன் கூட்ட நடவடிக்கைகளை காரியதரிசியால் வாசித்துக் காட்டப்பெற்றன.

ஒழுக்கம் என்னும் பொருள்பற்றித் தமிழ் வித்வான் கு. பெ. கந்தசாமி முதலியாராலும் நமது கடமை என்னும் விஷயத்தைப்பற்றி உப தலைவர் திரு. M. K. ஆபத்துலசாம முதலியாராலும், தொழிற் கல்வி என்னும் பொருள் பற்றித் திரு. ஆ. சடையப்ப முதலியாராலும் கல்வி அவசியமே என்னும் விஷயமாய் திரு. ப. சென்னியப்ப முதலியாராலும் உபந்நியாசங்கள் பெற்றது. இதைக்கேட்ட மாணவர் நால்வர் சுப்பரமணிய முறைமைகள் தம்பெருமை,



நமது வாழ்வின் நோக்கம், இசைக்கல்வி முதலிய விஷயங்களை நடித்துக்காட்டினபின், அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின :—

(1) செங்குந்த குலமக்கள் சீரடைய வேண்டிப் பல வழிகளிலும் முயற்சி செய்து தளரா ஊக்கத்துடன் உழைத்து வரும் சென்னைத் தென்னிந்திய செங்குந்தர் மஹாஜன சங்க நிர்வாக உத்தியோகஸ்தர்களனைவர்களுக்கும் இச்சங்கம் தனது அன்பார்ந்த வந்தனத்தையும் நன்றியையும் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது.

(2) சங்கக் கூட்டத்தில் பேச விரும்புவோர் யாவராயினும், தான் பேச விரும்பும் விஷயம் இன்னதெனக் காரியதரிசிக்கு முன்பாகவே தெரிவித்து நிகழ்ச்சிக் குறிப்பில் எழுதின பிறகு பேச முன் வர வேண்டும் என்று தீர்மானிக்கப்பெற்றது.

பின்னர் தலைவரின் முடிவுரைக்குப் பின் சங்க மெம்பர்களிடமிருந்து சந்தா வசூலித்துக் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறிய பிறகு இரவு 9-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

பி. மாரியப்ப முதலியார்,
காரியதரிசி, செங்குந்தர் சங்கம், உன்னியூர்.

## கட்டிப்பாளையம் செங்குந்தர் சங்கம்.

விபவஞூ ஆனி மீ 4௨ 17-6-28 மாலை 6-மணிக்குக் கட்டிபாளையம் திரு கு சுப்பராய முதலியாரவர்கள் வீட்டின் முகப்புறத்தில் செங்குந்த மகாஜனங்களின் இரண்டாவது பொதுக்கூட்டம் ஒன்று குழுமியது. அங்கு இவ்வூர் செங்குந்தர்களும் திருக்காட்டுத்துறையிலுள்ள செங்குந்தசிகாமணிகளும் கூடியிருந்தனர். ஷை கூட்டத்திற்குத் திரு. செ மு. கருப்பண்ண முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் சுமார் 100 பேர்கள் வரை கூடியிருந்தார்கள். அப்போது திரு. வை. ஆ. பழனியப்ப முதலியார் அவர்கள் நல்லொழுக்கம், விநாயகர் ஆலய கைங்கரியம், தேவாரம், திருவாசகம் இவைகளைப்பற்றி உபந்நியாசம் செய்தார்.

### தீர்மானங்கள்.

1 இச்சங்கத்தைச் சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைச்சங்கமாகச் சேர்க்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

2. தலைச்சங்கத்துக்கு இக்கிளைச் சங்கம் வருஷாந்தர கட்டணம் ரூ. 5-0-0 ஐந்து செலுத்த வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

3. இச்சங்கமானது நம் மரபினர் முன்னேற்றமடையப் பிரதி மாதமும் அமாவாசை தினத்தன்று கூட்டம் கூடத் தீர்மானிக்கப்பட்டது.

4. இச்சங்கத்துக்கென்று தனிக் கட்டடம் ஏற்படும்வரை தற்போதுள்ள கட்டிபாளையம் திரு.கு. சுப்பராய முதலியார் அவர்கள் வீட்டிலேயே இருந்து வரவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

5. நமது சங்கத்தில் சேர்ந்த அங்கத்தினர்கள் யாவரும் செங்குந்த மித்திரனை ஆதரித்து வரவேண்டுமென இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

6. இச்சங்கத்தின் நடவடிக்கைகளை நமது தலைச் சங்கத்துக்கு எழுதிச் செங்குந்த மித்திரன் வாயிலாக வெளியாக்கும்படி காரியதரிசிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

பிறகு இரவு 10-30 மணிக்குச் சபை இனிது நிறைவேறியது.

## கரூர் செங்குந்தர் சங்கம்.

19-5-29 வைகாசி மீ 6௨ சனிக்கிழமை அமாவாசையன்று மாலை 5 மணிக்கு ஷை ஊர் செங்குந்த சங்கம் ஸ்ரீகாமாக்ஷியம்மன் சன்னிதானத்தில் வெகு விமரிசையாய் கூடி அச்சங்கத்தில் அடியில்கண்ட தீர்மானங்கள் விதிக்கப்பட்டன. இச்சங்கம் மாதந்தோறும் அமாவாசையன்று அம்மன் சன்னிதியில் கூடுவதாயும், சங்கத்திற்கு அங்கத்தினர் மீ 1-க்கு ரூ 0-4-0 கொடுத்து வரவேண்டுமென்றும், அதில் தலைச்சங்கத்திற்கு வருடந்தோறும் ரூ. 5-0-0 செலுத்துவதாகவும், மீதம் இருக்கும் ரூபாய் பொக்கிஷதாரிடம் இருந்து வரவேண்டியதென்றும், அதில் நம் ஏழைப்பிள்ளைகளுக்கு உதவி முன்னேற்றமடைய புஸ்தகமுதலிய உதவி செய்கிறதென்றும், நம் செங்குந்த மித்திரனை ஒவ்வொருவரும் மிக்க ஆதரித்து மென்மேலும் பரவச்செய்ய வேணுமென்றும், யாவரும் ஏகமனதுடன் மிக்க ஊக்கமாய்ப் பேசி முடித்து, ஸ்ரீகாமாக்ஷியம்மனுக்கு நைவேத்ய தீபாராதனை செய்து இச்சங்கத்திற்கு அடியில் கண்ட உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர் சங்கத் தலைவர் திரு-கோ கெ. ராமசாமி முதலியார், காரியதரிசிகள் २. பழனியப்ப முதலியார், அ க அருணாசலமுதலியார், பொக்கிஷதார், கு, நாச்சியப்பமுதலியார்; கணக்குப் பரிசோதகர், அ. க. ஆறுமுக முதலியார் மற்றுமுள்ள நிர்வாக சபை அங்கத்தினர்.

17-6-28 அமாவாசையன்று ஸ்ரீகாமாக்ஷியம்மன் சன்னிதானத்தில் செங்குந்தர் மகாஜனசங்கத்தின் 2வது கூட்டம் பிரபலமாய் ஏகமனதுடன் கூட்டப்பெற்று, முன் கூட்டத் தீர்மானப்படி தலைச்சங்கத்திற்கு அனுப்பவேண்டிய ரூபாயும், கல்வி பயிலும் ஏழை மாணவர்களுக்குப் புஸ்தகச்செலவுக்கான பண

மும் வசூல்செய்து சங்கத்தலைவர் வசம் ஒப்புவிக்கப்பட்டது. அமாவாசை தோறும் கூடுவதால் வன்று தொழில் நிறுத்தம் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதுமன்றி, அவ்வமயம் புலால்மறுத்தல் குல முன்னேற்றம் என்னும் விஷயத்தைப்பற்றி அரிய உதாரண மேற்கோள்களுடன் 3-மணி நேரம் வரையில் தலைவர் கோ. செ. ராமசாமி முதலியார் உபந்யாசம் செய்து முடித்தார்.

22-6-28 வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு ஸ்ரீகாமாக்ஷியம்மன் சன்னிதானத்தில் இதற்கு முன் வாரந்தோறும் நடந்தேறிவரும் பஜனைக் கோஷ்டியில் பஜனை நடந்தேறியபின் நம் செங்குந்த மித்திரன் நம்குலமக்கள் வசிக்கும் ஊர் இன்னும் சில கிராமங்களுக்குச் செல்லாதிருக்கின்றது. ஒவ்வொரு ஊரிலும் 50, 75, 100, 150, குடிகளுக்குக் குறையாமலும் வசித்து வருகிறார்கள் அவர்கள் செங்குந்த மித்திரனைக் கண்டறியாதவர்களாய் இருப்பதாலும் நாம் இதனிடையமாய் மிகவும் கவனித்து மித்திரனை அவர்களுக்குப் போகும்படியாயும் செங்குந்தர் பிராந்தத்திரட்டு ஒவ்வொருவருக்கும் வாங்கியனுப்ப வேண்டுமென்றும் காரியதரிசி அ. சு. அருணாசல முதலியார் உபந்யசித்தார். வீவிங்பாக்டரி பனியன் பாக்டரி தனி தனி நெசவுத்தொழிலாளர் சவுளிக்கடைக்காரர் & சந்தை வியாபாரிகள் மற்றும் கடைகளில் சம்பளத்திலிருப்பவர் கூலிவேலைசெய்கிறவர்கள் முதலிய நம் குலமக்கள் யாவரும் அமாவாசையன்று வேலை செய்கிறதில்லை யென்று கண்டிப்பாய்த் தீர்மானித்து நன்று அம்மன் சன்னிதானத்திற்கு வந்து செங்குந்தர் சங்கம் அதிவிமரிசையாய் யாவரும் ஒருங்குகூடி நம் குலமுன்னேற்றமடைய மதவிலக்கல் புலால் மறுத்தல் கல்வி பயிற்றல் குல நன்றி பாராட்டல் இச்சங்கம் நிலைபெற்று மென்மேலும் பிரபலமடைதல் என்னும் இவ்வைந்து விஷயத்தைப்பற்றிப் பெரும்பாலும் முயற்சி எடுத்துக்கொள்வதாய் முடிவுகட்டிக்கொண்டனர். அடுத்த கூட்டத்தில் இன்னும் சில சட்டதிட்டங்கள் தீர்மானிப்பதாயும் பேசி இரவு 3 மணிக்கு யாவரும் ஏகமனதுடன் அம்மனை நப்பார்வதி பதையே எனும் சுலோகத்தால் வாழ்த்தி சங்கம் நன்கு நிறைவேறிற்று.

### கோவை ஜில்லாவில் கிளர்ச்சி

### பவானி செங்குந்தர் சங்கம்.

8-6-28 தேதி யன்று இரவு 9-மணிக்கு 5-வது கூட்டம் கூட்டப்பட்டது. அன்று 10 மெம்பர்களும், இன்னும் செங்குந்தர்பலரும் வந்திருந்தனர். காலைதினமே செங்குந்தமித்திரன் பத்திரிகையை வரவழைப்பவர்களிடம் சந்தா வசூல் செய்து அனுப்பவேண்டுமென்றும், இளைச் சங்கமாகிய நமது சங்கம் தலைச் சங்கத்திற்கு ரூ. 5-0-0 வருஷக் கட்டணம் செலுத்தவேண்டுமென்றும், மாதம் ஒருமுறை கூட்டம்கூடவேண்டுமென்றும் தீர்மானித்தனர். பின்னர் சங்கத்திற்கு நன்கொடையாக திருவாளர்கள் வ. கு. அ. நஞ்சப்ப முதலியார் (ஜவுளி வியாபாரம்), க. செ. வீ. இராமசாமி முதலியார் (ஜவுளி வியாபாரம்), வ. கு. சோ. வெங்கடாஜல முதலியார் (ஜவுளி வியாபாரம்), வை. நா. பழனியப்ப முதலியார் (ஜவுளி வியாபாரம்), க. செ. அர்த்தநாரி முதலியார் (ஜவுளி வியாபாரம்), மு. க. கந்தசாமி முதலியார் (பலசரக்கு மளிகை) ஆகிய அறுவரும் 6-0-0 ரூ நன்கொடையளித்தனர். பின்னர் கூட்டம் கலைந்தது.

21-4-28 தேதியிலிருந்து 2-6-28 தேதி வரை 8 கூட்டங்கள் கூட்டப்பட்டன. அக்கூட்டங்களில் கொலைமறுத்தல் முதலிய விஷயங்கள் பேசப்பட்டன மற்றும் 7 சீட்டுக்கமிட்டி மெம்பர்களைக்கொண்டு சங்கத்தின் சார்பாக 20 ரூ சீட்டு நடத்தவேண்டுமென்றும், அச்சீட்டில் சங்கத்தின் சீட்டு 4 சேர்க்க வேண்டுமென்றும், சீட்டின் லாப நஷ்டம் சங்கத்தையே சார்ந்ததென்றும், காரியதரிசியார் கொண்டுவந்த விதிகள் 22-ம் அங்கீகரிக்கப் பட்டதென்றும், சங்கத் தொகையை வட்டிக்குப் பெறுவோர் கமிட்டித்தலைவர் திரு. அ.கு.கு.வீ. மாரிமுத்து முதலியார் பேருக்கு பாண்டு எழுதிக்கொடுத்துப் பணம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும், வட்டிக்குப்பணம்பெற விரும்புவோர் சபையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென்றும், சீட்டுப்போடுபவர் ஏலத்தில் சீட்டெடுத்துத் தொகை பெற்றால் தலைவர் திரு. வ. கு. அ. க. அர்த்தநாரி முதலியாருக்குப் பாண்டு எழுதிக்கொடுக்க வேண்டுமென்றும், திரு. அ.கு.கு.வீ. மாரிமுத்து முதலியார் புத்தகக் காப்பாளராகவும், திரு. B. K. சுப்பிரமணிய முதலியார் கணக்குப் பரிசோதகராகவும், திரு. வ. கு. அ. க. அர்த்தநாரிமுதலியார், ஐ. க. பெருமாள்சாமிமுதலியார், கொ. ஆறுமுக முதலியார், பெ. இலட்சுமணமுதலியார், நா. பழனியப்ப முதலியார், எ. ப. கு. ஆ. குருநாத முதலியார், B. K. சுப்பிரமணியமுதலியார் இவர்கள் சீட்டுக்கமிட்டி மெம்பர்களாகவும், தலைச்சங்கத்திற்கு நமது சங்கம் 5 ரூ. வருஷ கட்டணமாகப் பணம் சேர்ந்தவுடன் அனுப்பிக்கொடுக்க வேண்டுமென்றும், பெட்டி ஒன்று வாங்கவேண்டுமென்றும், மை, பேனா, கூடு முதலியவை வாங்கவேண்டுமென்றும் தீர்மானித்தனர்.



அத்தீர்மானங்களின்படி 20 பேர்அடங்கிய சீட்டுக்கு ரூபாய் 40 சேர்ந்த சீட்டு நடத்திக்கொண்டு வருகின்றனர். முதல் மாதத்தொகை ரூபாய் 40-ம் சங்கத்தாரே எடுத்துக்கொண்டதால் அத்தொகை மாதம் 0-12-0 வட்டிக்கு இருவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஐ. க. பெருமாள்சாமி முதலியார்,
காரியதரிசி, பவானி.

### ஜம்பை செங்குந்த வாலிபர் கூட்டம்.

29-5-28 தேதியன்று இரவு 9 மணிக்கு ஜம்பை ஸ்ரீ தண்டபாணிசுவாமி ஆலயத்தில் செங்குந்த வாலிபர்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது, அக்கூட்டத்திற்கு வாலிபர் அநேகரும் பெரியோர்களும் வந்திருந்தார்கள். திருவாளர் கா. கு. இராமசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். அவர் தலைமையின்கீழ் கீழ்க்கண்ட விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன:—

(1) நம்மவர்களின் நன்மையைக் கருதி நம்மால் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் அச்சங்கத்திற்குச் 'செங்குந்த சன்மார்க்க வாலிபர் சங்கம்' எனப் பெயரிடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(2) சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(3) வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ தண்டபாணிசுவாமி ஆலயத்தில் கூட்டம் கூடவேண்டும்.

(4) வாரவாரம் மெம்பர்கள் அனைவரும் ஒரு அணா சந்தா செலுத்தவேண்டும்.

(5) சந்தாப் பணங்களை போஸ்ட் முதலியவை சங்கத்திற்காக வாங்கவும் சபையார் தீர்மானிக்கும் செலவுகளைச் செய்யவும் உபயோகிக்கலாம்.

கூட்டத்திற்கு வந்திருந்த பவானி செங்குந்த வாலிப சங்கக் காரியதரிசி திரு. ஐ. க. பெருமாள்சாமி முதலியார் சங்கத்தை நடத்தும்முறை என்பதைப்பற்றிப் பேசிய பின்னர் கற்கண்டு வழங்கப்பெற்றுக் கூட்டம் கலைந்தது.

### ஜம்பை செங்குந்த சன்மார்க்க வாலிபர் சங்கம்
### 2-வது, 3-வது, 4-வது கூட்டங்கள்.

2-6-28உ யன்று இரவு 8-மணிக்குக் கூட்டம் கூட்டப்பட்டது. அன்று மெம்பர்கள் யாவரும் வந்திருந்தனர்.

இக்கூட்டத்திற்குத் திருவாளர் பெ. மு. லக்ஷ்மண முதலியார் தலைமை வகித்தனர். நிறைவேறிய தீர்மானங்கள் :—

1. இதற்கு முன் நமது ஊரில் ஏற்பட்டுள்ள நமது செங்குந்தர் சங்கத்தையும் நமது தலைச் சங்கத்தையும் இச்சங்கம் ஆதரிக்க வேண்டும்.

2. கல்வியபிவிருத்தியின் பொருட்டு மெம்பர்கள் அனைவரும் வாரம் மும்முறை தண்டபாணி சுவாமி ஆலயத்திற்கு வரவேண்டும்.

3 அடுத்த கூட்டம் 9-6-28 கூட்டப்படவேண்டும்.

9-6-28 தேதி 3-வது கூட்டம் கூட்டப்பட்டது. இக்கூட்டத்திற்கு கா முனுசாமி முதலியார் தலைமை வகித்தனர். நிறைவேறிய தீர்மானங்கள் :—

(1) இவ்வாலிப சங்கத்தைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அங்கமாகச் சேர்க்கவேண்டும்.

(2) நமது தலைச் சங்கத்திற்கு வருடப்பிரதி வருடம் (3-0-0 மூன்று) ரூபாய் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும்.

(3) இச்சங்கத்திற்கு வேண்டிய சட்டதிட்டங்களைத் தலைச் சங்கத்தாரே தயார்செய்து அனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளவேண்டும்.

17-6-28-ல் 4-வது கூட்டம் கூட்டப்பட்டது. அன்று திரு. பெ. மு. லக்ஷ்மண முதலியார் தலைமை வகித்தனர். நமது சங்கத்திற்கு ஒரு செங்குந்த மித்திரன் பத்திரிகை அவசியம் வரவேண்டுமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

க. பொன்னையண்ணா முதலியார், காரியதரிசி,
செங்குந்த சன்மார்க்க வாலிபர் சங்கம், ஜம்பை.

### புலவன்பாளையம்

ஈரோடு தாலுக்கா முகாசி புலவன்பாளையம் உண்மைச் செங்குந்தர் பொதுக்கூட்டம் இரவு 9 மணிக்குக் கூடிற்று. அவ்வூர் உபாத்தியாயரும் நாட்டாண்மைக்காரருமான திரு. செல்லப்ப முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் அவ்வூரிலுள்ள செங்குந்த குலமக்கள் யாவரும் கூடியிருந்தார். அச்சமயம் கணபதி வா. ப. நஞ்சய்யமுதலியார் அவ்வூருக்கு வந்தார். அப்போது மை. நஞ்சய்ய முதலியார் நமது தலைச்சங்க செங்குந்த மித்திரன் சங்கதியை விரிவாகச் சொல்லிச் சந்தாதார்களைச் சேர்க்கும்படி கொல்லி மகாநாடு கூடவேண்டியது அவசியமெனப் பேசினார். இதைத் தலைவர் ஆதரித்தார். குழுமியிருந்த பலரும் வல்லிபுரத்தான் பாளையத்தில் நமது மித்திரன் ஆசிரியர் வந்து அவ்வூரிலுள்ள கட்சி பேதத்தை நிவர்த்தி செய்தார்; நாங்களும் பார்த்தோம், என்று சொன்னார்கள். இவ்வூரில் சங்கம் ஒன்று ஸ்தாபித்துத் தலை சங்கத்தை

ஆதரிப்பதாகவும் நம் தலைவர் பேருக்கு ஒரு பத்திரிகை வாங்கி யாவரும் பார்ப்பதென்றும் தீர்மானிக்கப் பெற்று கூட்டம் இரவு 11 மணிக்கு இனிது நிறைவேறினது.

## கணபதி.

கணபதி உண்மைச் செங்குந்த வாலிபர் இரண்டாவது கூட்டம் இரவு 9-மணிக்குக் காமாக்ஷியம்மன் கோவிலில் கூடிற்று. அவ்வமயம் பிரபல வியாபாரி திரு. ஷ. ா. சுப்பய்ய முதலியார் தலைமை வகித்து நமது ஒற்றுமை என்பது பற்றிச் சுருக்கமாகச் சொற்பொழிவு நடந்த பின்னர் தீர்மானமும் சங்கத்துக்கு உத்தியோகஸ்தர் தேர்தலும் நடந்தன.

### தீர்மானங்கள்.

1. இச்சங்கம் பிரதி நிறைநிலாதோறும் காமாக்ஷியம்மன் கோவிலில் கூட்டப்படவேண்டும்

2. நமது தென்னிந்திய உண்மைச் செங்குந்த தலைச்சங்கத்துக்கு ஆதாரமாக மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவரும் ஒரு அணா செலுத்தவேண்டும்.

3. நமது தலைசங்கத்துக்குப் பிரதி வருஷம் தவறாமல் முன்னமேயே ரூபாய் ஐந்து செலுத்திவரவேண்டும்.

4. நமது மகாநாடு தலைச்சங்கம் எந்த இடத்தில் கூட்டுகிறதோ அதற்கு நம்மால் கூடிய உதவி புரிதல் வேண்டும். பின்னர் கீழ்கண்ட உத்தியோகஸ்தரை நியமனம் செய்து இரவு 11-மணிக்குச் சபை இனிது நிறைவேறிற்று.

கணபதி வாலிபர்சங்கத்தின் தலைவரான திரு. வா. ப. நஞ்சைய்ய முதலியாரால் காமாக்ஷி அம்மன் கோவிலில் சாயந்திரம் 6-மணிக்கு விசேஷ கூட்டம் ஒன்று திரு. கா. மு. சித்திய முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் கூட்டப்பெற்றது. 20-6-28-ல் ஆர்காடு பெரியதனம் ம-ா-ா ஸ்ரீ பட்டக்கார் போடி திம்மம்பாளையம் ஸ்ரீமான் சின்னப்ப கவுண்டர் அவர்கள் விளாங்குச்சிறியில் வந்து இருந்தார்கள். அவ்வமயம் நமது உண்மைச் செங்குந்தர்களைச் சூழ்ச்சி செய்து போலிமக்கள் தாங்களும் செங்குந்தர் தான் என்று அப்பட்டக்காரரைத் தங்களிடம் வரி வாங்கவேண்டும் என்றும் அதினால் நடந்த விஷயத்தைப்பற்றியும் கேள்வியுற்றுப் போலிகள் செய்த சூழ்ச்சி பயன்படாதுபோன விஷயத்தைப்பற்றியும் 5 நாளாக இதற்காகவே அவ்வூரில் தங்கியிருந்த விஷயத்தைப்பற்றியும் கூடியிருந்த உண்மைச் செங்குந்தர் முன்னிலையில் 2-மணி நேரம் பேசிப் போலிகள் சமமந்தப்பட்ட எந்த சூழ்ச்சிகள் செய்தாலும் நமது உண்மைச் செங்குந்தமக்கள் கட்டுப்படக் கூடாதென்று தீர்மானித்துச் சபை இனிது நிறைவேறிற்று.

பெ. ந. பழனியப்ப முதலியார்,

### விளாங்குறிச்சி உண்மைச் செங்குந்தர் பொது கூட்டம்.

கோ. தா. விளாங்குறிச்சியிலுள்ள வியாபாரி திருவாளர் கெ. இராமசாமி முதலியார் வீட்டில் கணபதி வாலிபர் சங்கத் தலைவர் வா. ப. நஞ்சைய்ய முதலியார் பிரசாரத்தின் பயனாக ஒரு பொதுக்கூட்டம் அவ்வூர் பெரியதனம் இ. வெங்கடாசல முதலியார் தலைமையின் கீழ்க் கூடிற்று. சுமார் 60 பேருக்குக் குறையாமல் கூடியிருந்தார்கள். அவர்களின் முன்னிலையில் திரு. வா. ப. நஞ்சைய்ய முதலியார் சொன்னதாவது:—இவ்வூரிலுள்ள தாசி வகுப்பார்களாகிய போலிகள் செய்கிற சூழ்ச்சிக்கு யாவரும் கட்டுப்படக்கூடாது இவ்வூருக்கு விஜயம் செய்திருக்கும் ஸ்ரீ ஆர்காடு பெரியதனம் பட்டம்பெற்ற வேளாள பிரமுகராகிய பட்டக்கார போடித்திம்மம்பாளையம் சின்னய்ய முதலியார் என்பவருக்கும் நம் உண்மைச் செங்குந்த மக்களுக்கும் நமது பத்திரிகையும் போலிகள் செய்கிற சூழ்ச்சியும் நமது சங்கஸ்தாபனமும் தெரியாது. ஆகையால் ஏதோ பொய்ச்சூழ்ச்சி செய்து ஏர்வித பந்தோபஸ்தும் கொண்டாடவேண்டிய ரிகார்டு செய்ய சூழ்ச்சி செய்கிறார்கள்; வம்புக்கு இழுக்கிறார்கள். ஆனாலும் ஸ்ரீ பட்டக்காரருக்கு ஒவ்வொரு சாதி விஷயமும் தெரியும் அவரிடம் நாம் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை என்பது பற்றியும்; போலிகளால் நடக்கும் சூழ்ச்சியைப்பற்றி நமது தலைச்சங்கத்துக்குத் தானே கடிதமூலமாய்த் தெரிவிக்கிறதாகவும், அதைப் பார்த்து நமது உண்மை மக்கள் ஏமாறமாட்டார்கள் என்றும், நமது பத்திரிகைவாயிலாகக் கண்டனம் நடப்பதையும், கோவை என். பழனியப்ப முதலியார் நம்மிடம் இல்லாத துர்ப்பழக்கம் உண்டென்று சொல்கிற விஷயத்தையும் நமது பத்திரிகையின் ஒவ்வொரு பகுதிகளைக் காண்பித்தும், போலிகள் வசிக்கும் வரிசில் இருந்துகூட நமது தலைச்சங்கத்தை ஆதரிக்க ஒவ்வொரு குடும்பத்தாரும் பத்திரிகை வாங்கி அதின் மர்மம் தெரிந்து நமது மகாநாடு கூட்டுவித்துச் சமூகம் முன்னேற்றமடைவித்தல் வேண்டும் என்றும் கல்வி ஒற்றுமை நமது சமூகம் எல்லாம் பற்றியும் வெகு விமரிசையாய் 4 மணி நேரம் பேசினார். அச்சபைக்கு விஜயம் செய்திருந்த அவ்வூர் நாச்சியப்ப கவுண்டர் குமாரர் திரு. செங்காளியப்ப கவுண்டரும் அப்பணிக்கவுண்டர் குமாரர் திரு. ஒருசாமிக் கவுண்டரும் ஆதரித்துப்பேசினார்கள். சபையிலுள்ள யாவரும்



இதுசமயம் போலிகளுக்கும் எங்களுக்கும் பட்டக்காரரிடம் நடக்கும் விஷயத்திற்கு ஏற்ப நீங்களும் இவ்வூருக்கு விஜயம்செய்ய நாங்கள் என்ன தவம் செய்தோமோவென்று புகன்று நமது பத்திரிக்கை நமது சங்கம் இதுவரை தெரியாதென்றும் எங்களுக்கும் போலிகளுக்கும்நடக்கும் விஷயம் நமது சங்கத்துக்கு நீங்களே தெரியப்படுத்தவேண்டும் என்றும், கணபதி வாலிபர் சங்கத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறோம் என்றும், கோவை N. பழனியப்ப முதலியார் நமது இடம் இல்லாத துர்பழக்கத்தை உண்டென்று சொல்வதைக் கண்டிக்கிறோம் என்றும், சங்கஸ்தாபனம் அடுத்த கூட்டத்தில் செய்யலாம் என்றும் முடிவு கட்டி இரவு 3-மணிக்குச் சபை இனிது நிறைவேறிற்று.

தே. ரா. சாமியப்ப முதலியார்,
விளாங்குறிச்சி.

## செங்கல்பட்டு ஜில்லாவில் கிளர்ச்சி.

### சிறுதவத்தூர் செங்குந்த வாலிபர் சங்கம்.

20-5-28-ல் மாலை 6-30-மணிக்குச் சமீன் பெரிய சயப்பாக்கம் காரியதரிசி சைவத் திருவாளர் V. S. நடேச முதலியார் அவர்கள் மேற்படி சிறுதவத்தூர் கிராமத்துக்கு வந்து சேர்ந்தனர்.

அச்சமயம் ஊர்ப் பொதுகூட்டம் ஒன்று கூடிற்று. அவ்வமயம் காரியதரிசி திரு. வி. ச. நடேச முதலியார் அவர்கள் ஒற்றுமை யென்னும் விஷயத்தைபற்றிப் பேசியபின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இவ்வூருக்குச் செங்குந்தகுல முன்னேற்றத்திற்காக ஒரு சங்கம் ஸ்தாபிக்கபட வேண்டும்.

ஆசங்கத்திற்குச் செங்குந்த சன்மார்க்க வாலிப சங்கமெனப் பெயர் வைக்கப்பட்டது.

இச்சங்கக் கூட்டம் வெ. பொன்னுசாமி முதலியார் அவர்கள் இல்லத்தில் கூடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இச்சங்கத்திற்கு கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்—வெ. பொன்னுசாமி முதலியார்.
துணைத்தலைவர்—கொ. அப்பாவு முதலியார்.
உபதலைவர்—கு. தங்கவேலு முதலியார்.
காரியதரிசி—ந. அண்ணாமலை முதலியார்.
பொக்கிஷதார்—ஆ. முனுசாமி முதலியார்.

இச்சங்கத்தைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச்சங்கமாக ஸ்தாபித்து பிரதி வருஷம் 3-8-0 விகிதம் தலைச் சங்கத்திற்குச் கட்டணமாகச் செலுத்தவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

செங்குந்தமித்திரன் பத்திரிகையை ஒவ்வொருவரும் ஆதரிக்கவேண்டுமென்றும் எங்களுருக்காக ஒரு மித்திரன் வரவழைக்க வேண்டியதென்றும் தீர்மானம்செய்து மித்திரன் ரூபா 1-8-0-யும் கட்டணம் ரூபா 3-8-0 ஆக ரூபா 5-0-0-ம் வருஷா வருஷம் கட்டணமாகக் கட்டிவிடவேண்டுமென்று தீர்மானஞ் செய்தார்கள்.

சட்டதிட்டங்கள் அடுத்த கூட்டத்தில் காரியதரிசியவர்களால் வரையறை செய்யப்பட வேண்டியது என்று தீர்மானம் செய்யப்பட்டது. சங்க பாரங்களை இன்றே பூர்த்திசெய்ய வேண்டியதெனத் தீர்மானிக்கப்பட்டது.

22-6-28-ல் இரவு 8-மணிக்குச் செங்குந்தவாலிப சங்கம் கூட்டப்பெற்றது. அது சமயம் பெரிய சயப்பாக்கம் செங்குந்தவாலிப சங்கத் தலைவர் திரு. ஆ. கந்தசாமிமுதலியாரும், திரு. வி. ச. அண்ணாமலை முதலியாரும் வந்து இருந்தனர். அப்போது அக்கூட்டத்திற்குத் திரு. வெ. பொன்னுசாமிமுதலியார் அவர்கள் தலைமை வகிக்கத் திரு. ஆ. கந்தசாமி முதலியாரும், திரு. வி. ச. அண்ணாமலை முதலியாரும் கௌருண்யத்தை விளைவிடையாக 2-மணி நேரம் பல உதாரணங்களோடு பேசி முடித்தார்கள். பிறகு தலைச் சங்கத்திற்கு நாம் செலுத்தவேண்டிய கட்டணம் ரூபா. 4-யையும் சீக்கிரம் அனுப்பி வைக்கவேண்டியது என்றும் செங்குந்தமித்திரனை ஒவ்வொருவரும் ஆதரிக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பெற்றது. வந்தன உபசாரத்தோடும் கடவுள் வாழ்த்தோடும் இரவு 1-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

திரு. ந. அண்ணாமலை முதலியார், காரியதரிசி.

## தேவாதூர்.

17-6-28-ல் அமாவாசையினன்று பகல் 1½-மணிக்குக் கோட்டு தேவாதூர் செங்குந்தர் பஜனைக்கூடத்தில கூட்டம் கூட்டப்பட்டது. பிறகு தலைவர் காரியதரிசி முன்னிலையில் சகலமான பேர்களிடமும் மாதச் சந்தா 0-1-0 வீதம் வசூல் செய்யப்பட்டது. பிறகு தலைவர் க. பொ. தருமலிங்க முதலியாரால் கடவுள் வணக்கம் பாடப்பெற்றது புலாலருந்தலைப் பற்றியும் நீண்டநேரம் உபந்நியாசம் செய்தனர். அதன பிறகு சபையிலுள்ள திருவாளர் அனைவரும் நமகுல முன்னேற்றத்தைப்பற்றியும் கல்வி ஒழுக்கங்களைப்பற்றியும் யாவரும் ஒப்புக்கொண்டு ஸ்ரீகண்ணபிரான் முன்னிலையில் தீர்மானம் செய்யப்பட்டது. பிறகு சபைக் காரியதரிசி சி. மு. செல்லப்ப முதலியார் சென்னை சட்டசபை டில்லி சட்டசபை முதலிய இடங்களில் நம்மவர்கள் முன்னேற்றமடைய வேண்டுமென்று பேசினர். அதன் பிறகு யாவரும் சமமந்தித்துச் சுமார் 4-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

தலைவர் பெயருக்கு ஓர் பத்திரிகை நமது ஊருக்கு வரவழைக்கவேண்டுமென்று தீர்மானஞ் செய்யப் பட்டது. சு. பொ. தருமலிங்க முதலியார்.

### வடமணப்பாக்கம் வாலிபர் சங்கம்.

19-6-28-ல் ஆதிவாரம் அமாவாசை தினம் மாலை 7-மணிக்குப் பஜனை கோவில் மண்டபத்தில் சங்கக் கூட்டம் கூடினது. திருவாளர் சி. சு. வைரவ முதலியார் தலைமை வகித்துத் திருவாளர் கா. விஜயராகவ முதலியார் அவர்களால் கடவுள் வாழ்த்தாகத் தேவாரம் ஓதப்பெற்றபின் சங்கத்தில் பொதுச் செலவுக்காக பிரதி அமாவாசைதினம் தறி ஒன்றுக்கு 0-0-6 வீதம் வசூலிப்பதாகவும் அமாவாசை தினம் தறி செய்யக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டுச் சங்கக் கூட்டம் இனிது கலைந்துவிட்டது.

பு. சடையாண்டி முதலியார், காரியதரிசி.

### ஒரு நிருபம்.

செங்குந்தமித்திரன் பத்திரிகாசிரியர் அவர்களுக்கு,

கனம்பொருந்திய ஐயா,

தங்களது முயற்சியினால் சென்ற ஒரு வருஷ காலமாக நம்மவர்களிடையே ஒரு புத்துணர்ச்சி உண்டாகி ஒரு நூற்றுக்கு மேற்பட்ட செங்குந்தர் சங்கங்கள் எல்லா ஜில்லாக்களிலும் ஏற்பட்டுச் சாதி முன்னேற்ற விஷயத்திலே மிகுந்த உற்சாகத்தோடு உழைத்து வருவதைக் காணவும் கேட்கவும் எனக்கு அளவிலா ஆனந்தம் உண்டாகிறது. எனினும் நம்மவரிடையே உள்ள தனி நபர்களுக்குள் பொறாமை சுயநலம் காரணமாக அப்போதைக்கப்போது ஏற்படும் சில்லறைச் சண்டைகள் அவரவர்கள் கிராமங்களில் கட்சிப் பிரதி கட்சிகளை யுண்டாக்கி ஆங்காங்கே நம்மவரிடைத்தோன்றும் பொது நன்மைக்கான பல நல்ல முயற்சிகளுக்கெல்லாம் இடைஞ்சல் உண்டாக்கிக்கொண்டிருப்பது நம் சாதியார்களுக்கு நெடுங்காலமாகப் பிறந்துள்ள சாபக்கட்டுக்களில் ஒன்றுபோலும். இச்சாபக்கட்டானது விலக்கப்பட்டு நம்மவர் சமுதாயம் பல இடங்களிலும் ஒற்றுமையினால் உண்டாகும் சக்தியைப்பெற்று வெகு சீக்கிரம் முன்னேற்றமடைவதற்கு இச்சங்கங்கள் தோன்றியதனால் வழியேற்பட்டு விட்டதென்றே மகிழ்ந்திருந்தேன். ஆயினும், இரண்டொரு மாதகாலமாக எனது ஜில்லாவில் இரண்டொரு இடங்களில் மேற்கூறிய பொறாமைப் பேய்களும் சுயநலப்பிசாசுகளும் பழையபடி நம்மவர்களிடைப் புகுந்து பிளவுகளை உண்டாக்க முயற்சிப்பதைக் காண எனக்கு மிகவும் மனவருத்த முண்டாகிறது. நமக்குள் ஒருவர் மேலொருவர்க்கிருக்கும் காய்ச்சல் காரணமாகத் தத்தமக்கு எச்சங்கங்களில் செல்வாக்கு உண்டோ அச்சங்கங்களைத் தமக்குக் கருவிகளாக்கிக்கொண்டு ஒருவர்மீது ஒருவர் கண்டன தீர்மானங்களைப் பிரேரேபித்துக்கொண்டு ஒருவரை ஒருவர் பழித்துப்பேசி வீண் சண்டைக்கிழுக்கிறார்கள். தனிப்பட்ட நபர்களைப் பழித்தலும் இழித்துக் கூறுதலும் சங்கங்களின் கடமையல்ல என்பது நம்மவர் தற்போதுள்ள மௌடீக நிலைமையில் அவர்களுக்கு விளங்கவில்லை. ஆதலால் மான நஷ்டத்திற்காகத் தாவாக்களை விளைவிக்கக்கூடிய தீர்மானங்கள் சில தனிநபர்களைப் பழித்தும் இழித்தும் கண்டித்தும் கொண்டுவரப்பெறினும் நம்மவர் தமது மௌடீக நிலைமையில் அவற்றைத் தலையசைத்து அங்கீகரித்து விடுகின்றனர். கண்டன தீர்மானங்கள் பொதுக் கொள்கைகளையும் செயல்முறைகளையும் மட்டும் தாக்க வல்லவைகளாக இருக்கவேண்டுமே ஒழிய, தனிப்பட்ட ஆட்களைப் பழிக்கவோ அவமானப் படுத்தவோ ஏற்பட்டவை அல்ல என்னும் விதி நம்மவர்களுக்கு இன்னும் விளங்கவில்லை. இதனால் வெகு உற்சாகத்துடன் உழைத்துவந்த சங்கங்களில் கலகங்கள் ஏற்பட்டு அவைகள் உறக்கத் தொடங்குகின்றன. அவைகளுக்குத் தக்க புத்தி சொல்லி ஒழுங்கான முறைகளில் வேலைசெய்யத் தூண்டுவது தங்கள் கடமையாகும்.

ஒரு குலாபிமானி.

(குறிப்பு) தனிப்பட்ட நபர்களைப் பழித்தும் அவமானப்படுத்தியும் அனுப்பிய தீர்மானங்கள் எமக்கு வெகு சிலவே வந்தன. அவற்றை நாம் பிரசுரிக்கவில்லை. அத்தகைய தீர்மானங்கள் இனிவரினும் பிரசுரிக்கமாட்டோம். சங்கங்கள் குலமுன்னேற்றத்துக்கான தொண்டுகளைச் செய்ய இருக்கின்றன. தனி நபர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் மனஸ்தாபங்களை நீக்க முயற்சிப்பது அவற்றின் கடமையாக இருக்க, ஒருவர் மேல் ஒருவர் மானநஷ்ட தாவாக்களுக்கு இடங்கொடுக்கும் தீர்மானங்களைக் கொண்டுவர விடுதல் மிகவும் விசனிக்கத்தக்கதே. இது விஷயத்தில் சங்கத் தலைவர்களும் காரியதரிசிகளும் வெகு சாக்கிரதையாக இருத்தல் வேண்டும். நமது நிருபர் குறிப்பிடும் பொறாமைப் பேய்கள் வசமும் சுயநலப்பிசாசுகள் வசமும் நமது சங்கங்கள் சிக்காமலிருக்குமாறு அவற்றைக் காப்பாற்ற எல்லாம்வல்ல இறைவனை நாம் துதி செய்துகொண்டேயிருக்கின்றோம்.—ப-ர்.



## பாமாலைப் பகுதி.

### விடை

பிரபவஸு மாசி மாதம் செங்குந்தமித்திரன் 73-ம் பக்கம் கடை முடி நடுவெழுத்து அலங்கார வினாவுக்கு விடை

கலி வெண்பா.

தக்கதென்ப தக்ககுதி சார்ந்தவன்பு பக்தியென்றும்
மிக்காகார் தாரண மிருசகுனி—அக்கா
டடவியோ ணன்கோம்பி யைந்து பதத்தில்
இடமாய் நடுவெழுத்தைச் சேர்க்க—குடமாகும்
பின்னே தயிர்ததியாம் பேசுகண வன்பதியே
சன்னதமாம் காரிசனி சாதமவி—யுன்னிதமாம்
முல்லைநில மாதர் முருக்கான கோபியரே
வல்ல கவிப்பொருளில் வார்.

| | | | |
|---|---|---|---|
| தக்கது<br>அன்பு<br>கார்தாரன்<br>காடு<br>ஓணன் | தகுதி<br>பக்தி<br>சகுனி<br>அடவி<br>கோம்பி | ததி<br>பதி<br>சனி<br>அவி<br>கோபி | தயிர்<br>கணவன்<br>காரி<br>சாதம்<br>முல்லைநிலமாதர் |

### ஒரு வினா

கடைமுதல் நடுவெழுத் தலங்காரம்

செந்தாரான் வாசனையுந் தேவிவசு ஆலவம்பெண்
கந்தன்பேர் மந்திக கடைமுதலும்—விந்தரவு
கஞ்சனுடன் மேறுவச்சம நாகும் பழமிதனை
சஞ்சைகையில் வந்திடவே சாற்று.

### வாழ்த்துப்பா

தெள்ளிந் தியசங்கச் செங்குந்த மித்திரனும்
மன்னுமினச் சங்கம் மலிக்காக—இன்னிலத்தில்
குந்தப படையார் குலமேம லாக்கதைக
கந்தப்பா வந்துவந்து கா.

கோ. தே. இராமசாமி முதலியார்,
செங்குந்த மகாஜன சங்கத் தலைவர், கரூர்.

### பிழை திருத்தம்.

உ௱சஅ-வது பக்கம் அச்சிட்டுள்ள 'விண்ணப்ப'ப் பாவின் வரியைப் 'பொங்குந்தன்' எனப் படிக்க.—ப-ர்.

### அறிக்கை.

உபகாரச் சம்பளத்துக்காகத் தலைச்சங்கத்துக்கு அனுப்பப்பட்டிருக்கும் மனுக்கள் அடுத்த நிருவாக சபைக் கூட்டத்தில் கவனிக்கப்பட்டு ஆவணி மீ பத்திரிகையில் முடிவான தீர்மானம் வெளியிடப்படும் எனத் தலைச்சங்க அமைச்சர் தெரிவித்துக்கொள்ளுகிறார்.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்துக்கு மேமீ முதல் தாளது தேதி வரையில் வசூலான உண்டியல் மகமை நன்கொடை வரவுகள்.

### உண்டியல்.

#### சென்னை.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| மதராஸ் பாளையகாட் கம்பெனியார் மூலம் பிரபவ பங்குனிக்கு | 47 | 0 | 0 |
| விபவ சித்திரைக்கு | 64 | 0 | 0 |
| ,, வைகாசிக்கு | 40 | 0 | 0 |
| ,, ஆனிக்கு | 36 | 0 | 0 |
| தி. ச. ராம. ராமசாமி முதலியார் கம்பெனி மூலம் | 25 | 8 | 0 |
| S. K. M. காயாரோகண முதலியார் பிரதர் மூலம் | 10 | 8 | 0 |

#### காஞ்சீபுரம்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| தி. அரு. அருணசல முதலியார் மூலம் | 80 | 0 | 0 |

### மகமை.

#### சைதாப்பேட்டை.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| நாஷனல் பாளையகாட் கம்பெனி பங்குனி, சித்திரைக்கு | 19 | 15 | 0 |
| பெஸ்ட் பாளையகாட் கம்பெனி பங்குனி, சித்திரை | 23 | 12 | 3 |
| வைகாசிக்கு | 11 | 11 | 3 |
| சுபீரியர் பாளையகாட் கம்பெனி பங்குனிக்கு | 16 | 2 | 0 |
| வேலாயுதம் கம்பெனி பங்குனி, சித்திரைக்கு | 3 | 0 | 0 |
| S. சடையப்ப முதலியார் கம்பெனி பங்குனிக்கு | 5 | 1 | 6 |
| உ. அரு. அருணசல முதலியார் அண்டு சன்ஸ் பங்குனி, சித்திரைக்கு | 4 | 0 | 0 |

### நன்கொடை.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| ஸ்ரீ அரிமழம் சதாசிவானந்த ஸ்வாமிகள் | 7 | 0 | 0 |
| திருப்பத்தூர் முனிசிபல் சேர்மன் திரு. K A.சண்முகமுதலியார் | 50 | 0 | 0 |
| குடியேற்றம் முனிசிபல் கவுன்சிலர் திரு. மா. வேலாயுத முதலியார் | 25 | 0 | 0 |

### கிளைச்சங்க கட்டணம்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| அம்மையப்பட்டு | 10 | 0 | 0 |
| பெருநகர் | 10 | 0 | 0 |
| குருவராஜபேட்டை | 5 | 0 | 0 |
| பெரியகயப்பாக்கம் | 5 | 0 | 0 |
| ஐயன்பேட்டை | 10 | 0 | 0 |
| ஐயங்கார் குளம் | 10 | 0 | 0 |
| உத்திரன்மேரூர் (ஒரு பாகம்) | 10 | 0 | 0 |
| யாழ்ப்பாணம், கல்லூர் | 5 | 0 | 0 |
| பவானி | 5 | 0 | 0 |
| கரூர் | 5 | 0 | 0 |
| கட்டிபாளையம் | 5 | 0 | 0 |
| சென்னை (வாலிபர்) | 5 | 0 | 0 |
| உன்னியூர் | 25 | 0 | 0 |


விளம்பரம்

# சுதந்தரன்

ஆசிரியர் :

சு. நா. சுந்தர முதலியார்.

இது இரங்கூனில் வாரந்தோறும் வெளிவரும் ஒரு அரிய செந்தமிழ்ப் பத்திரிகை. தேசிய உணர்ச்சி நிரம்பியது. பர்மாவிலும் மலேய நாடுகளிலும் இந்தியாவிலும் உள்ள தமிழர்களுக்கு ஒரு சிறந்த ஞானதீபிகை யெனவும், சுதந்தரக்கொடி யெனவும் விளங்குவது. விளம்பரங்களுக்கு ஏற்ற தகுதியுடையது.

சந்தா விகிதம்.

| உள்நாட்டில். | | வெளிநாட்டில். | |
|---|---|---|---|
| 1 வருஷத்துக்கு | 5 0 0 | 1 வருஷத்துக்கு | 6 0 0 |
| 6 மீ "த்துக்கு | 2 8 0 | 6 மீ "த்துக்கு | 3 0 0 |

மானேஜர் :

"சுதந்தரன்" ஆபீஸ்,
39/37-வது வீதி, ரயில்வே பிளாக்,
இரங்கூன்



80-வருஷ காலமாக உலக பிரசித்தியடைந்த

# அசல்



# ஷண்முகம் பட்டணம் பொடி

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

அநேக வருஷங்களாக ... கொண்டாடி, அசல் ... பசும் நெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப்பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு ... மாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமாந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதுரை.

முதல் தரமானது

பார்சல் தபால் சார்ஜு

| பலம் | கிரயம் ரூ.அ.பை. | தபால் சார்ஜு ரூ.அ.பை. | பாக்கிங் ரூ.அ.பை. | மொத்தம் ரூ.அ.பை. |
|---|---|---|---|---|
| 8 | 1 0 0 | 0 5 0 | 0 1 0 | 1 6 6 |
| 20 | 1 12 0 | 0 8 0 | 0 2 0 | 2 6 [illegible] |
| 40 | 3 8 0 | 0 14 0 | 0 3 0 | 4 9 0 |

2-வது தரமானது வீசை 1-க்கு ரூ 3. ஸ்பெஷல் சரக்கு வீசை 1-க்கு ரூ 4.

பாக்கிங் சார்ஜும் தபால் கூலியும் பிரத்தியேகமானது.



விநோத கதாமஞ்சரி, வெளிவந்து விட்டது!

## மாப்பிள்ளை மருமகளாதல்

நூலாசிரியர்: பண்டித கதாரத்ன
சே கிருஷ்ணசாமி சர்மா.

தமிழ்நாடு வெகு நாட்களாய் எதிர்பார்த்திருந்த அரிய புத்தகம் இதுவே. இது நாவல் அல்ல. புராணமல்ல. வேதாந்தமல்ல. காவ்யமல்ல. பிரபந்தமல்ல. இது ஒரு விநோத கதா களஞ்சியம். புத்தகத்தைப் படிக்கத் துடங்கியது முதல் முடியும்வரையில் மனதின் உற்சாகம் மிதமற்றிருக்கும். அநேக தடவைகள் படித்தாலும் ஆவல் தீராது. ஆண் பெண் அனைவரு மறியத்தக்க விஷயங்கள் அநேகமிருக்கின்றன. தமிழ்மக்கள் இதுவரை இவ்வித புத்தகம் படித்திருக்க மாட்டார். சில காபிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

ரப்காகிதம் ரூ. 1—0—0
கிளோஸ் காலிகோ ரூ. 1—8—0

ஜீ எஸ். சாஸ்திரி அண்டு கோ.
தபால்பெட்டி நெ. 110, சென்னை.



விளம்பரம்.

'ஆரம்பாசிரியன்,' 'செங்குந்த மித்திரன்' பத்திரிகாசிரியர்

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., இயற்றிய தமிழ் நூல்கள்.

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| 1. | சிறுவர்க்கான சிறு கதைகள் : முதற்புத்தகம் | 0 | 3 | 0 |
| 2. | ,, இரண்டாம் புத்தகம் ... | 0 | 3 | 0 |
| 3. | சிறு போரி பெருந்தீ ... | 0 | 4 | 0 |
| 4. | பொறாமைப் பேய் ... | 0 | 4 | 0 |
| 5. | செய்யுட் கதைகள் ... | 0 | 12 | 0 |

முதல் நான்கும் வெகு இனிமையாய் மிகவும் எளிய நடையில் பிரைமெரி பாடசாலைகளில் கதா வாசகங்களாக உதவுமாறு எழுதப் பெற்றவை. ஐந்தாவது மேல் வகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக உதவும். இவை உபாத்தியாயர்களுக்கு நூற்றுக்கு இருபது தள்ளிக் கொடுக்கப்படும்.

கிடைக்குமிடம் :

டீசர்ஸ் பப்ளிஷிங் ஹௌஸ்,
200, தம்பு செட்டித் தெரு, சென்னை

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

ஸ்ரீ ... ச. ...ஸ்வாமிநாத தேசிகரால் கணிக்கப்பட்டது.

விபவ ஸ்ரீ ஆடி, ஆவணி௴ (1928ஸ்ரீ ஆகஸ்டு௴)

தக்ஷிணாயனம், கிரீஷ்மருது, வருஷருது, கடகம் சிம்மம் கலி 5030, சாலி 1851, பசலி-1337-38, பிரபவ 2.

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | கிழமை | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | ... | யோகினி | விரதாதிகள் முதலிய சுபதினங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | புத | பௌ 37-35 | உத் 7-55 | அ, 7-55 சி | 2 | 1 | பௌ | தெற் | |
| 2 | 18 | வியா | பிர, 36 50 | திரு 9 35 | சி, 60 | 2 | 1 | பிர | மேற் | |
| 3 | 19 | வெ | துதி, 30-58 | அவி 9-58 | சி, 60 | 2 | 1 | துதி | வ-மே | |
| 4 | 20 | சனி | திரி, 32-8 | சத 9-23 | அ, 9-23 ம | 2 | 1 | திரிதி | வ-கி | |
| 5 | 21 | ஞா | சது, 28-35 | பூர 8-0 | சி, 8 0 அ | 2 | 1 | சது | ஆகா | |
| 6 | 22 | திங் | பஞ், 24-23 | உத் 5 55 | சி, 60 | 2 | 1 | பஞ் | பூமி | |
| 7 | 23 | செவ் | சஷ், 19-48 | ரே 3-23 | சி, 60 | 2 | 0 | சஷ் | கிழ | |
| 8 | 24 | புத | சப், 14-50 | அசு 0-25<br>பர 57-13 | ம, 0-25 சி | 2 | 0 | சப்<br>அஷ் | வட | |
| 9 | 25 | வியா | அஷ், 9-35 | கிரு 53-43 | ம, 60 | 1 | ½ | நவ | தெ-கி | ஆடி கிருத்திகை மூர்த்தி<br>புகழ்ச்சோழர் |
| 10 | 26 | வெ | நவ, 4-8<br>தச, 58-33 | ரோ 50-43 | ம, 50-43 சி | 1 | ½ | தச | தெ-மே | அவமாகம் |
| 11 | 27 | சனி | ஏகா, 52-53 | மிரு 46 18 | சி, 60 | 1 | ½ | ஏகா | மேற் | |
| 12 | 28 | ஞா | துவா, 47-18 | திரு 42-40 | சி, 60 | 0 | ½ | துவா | வ-மே | உத்தம நாயனர் |
| 13 | 29 | திங் | திர, 42-0 | புன 39-15 | அ, 39-15 | 0 | ½ | திர | வ-கி | பிரதோஷம் |
| 14 | 30 | செவ் | சது, 37-15 | பூச 36-28 | சி, 60 | 0 | 0 | சது | ஆகா | விநாயகர் குளிக்க |
| 15 | 31 | புத | அமா, ● 33-18 | ஆயி 34-28 | சி, 60 | 0 | 0 | அமா | பூமி | சிம்மரவி 50-10, அமாவா |
| 16 | 1 | வியா | பிர, 30-33 | மக 33-33 | அ, 33 33 சி | 0 | 0 | ஞன் | கிழ | சந்திரதரிசனம் |
| 17 | 2 | வெ | துதி, 29-10 | பூர 34-8 | சி, 60 | 0 | 0 | ஞன் | வட | கணபதி விரதம் |
| 18 | 3 | சனி | திரி, 29-25 | உத் 34-20 | ம, 60 | 0 | ½ | திரி | தெ-கி | சுயம் விலக்க |
| 19 | 4 | ஞா | சது, 31 35 | அஸ் 40 10 | அ, 40-10 சி | 0 | ½ | சது | தெ-மே | மாத சதுர்த்தி விரதம் |
| 20 | 5 | திங் | பஞ், 35-13 | சித் 45-35 | பி, 45 35 அ | 1 | ½ | பஞ் | தெற் | கருடபஞ்சமி |
| 21 | 6 | செவ் | சஷ், 40-29 | சுவா 52-18 | சி, 52-18 ம | 1 | ½ | சஷ் | மேற் | சஷ்டி விரதம் |
| 22 | 7 | புத | சப், 45-10 | விசா 59-48 | சி, 60 | 1 | ½ | சப் | வ-மே | வியாதியஸ்தர் குளிக்க |
| 23 | 8 | வியா | அஷ், 52-13 | அனு 60 | சி, 60 | 1 | ½ | அஷ் | வ-கி | திருநிலைப்பிருக் |
| 24 | 9 | வெ | நவ, 58-18 | அனு 7-35 | சி, 7-35, ம | 1 | ½ | நவ | ஆகா | வரலக்ஷ்மி விரதம் |
| 25 | 10 | சனி | தச, 60 | கே 14-50 | சி, 60 | 2 | ½ | தச | பூமி | இணை வெட்ட |
| 26 | 11 | ஞா | தச, 3-45 | மூ 21-3 | அ, 21-3 சி | 2 | 0 | ஏகா | பூமி | விவாஹம் 9-க்குள் மழை |
| 27 | 12 | திங் | ஏகா, 7-25 | பூரா 25-48 | ம, 60 | 2 | ½ | துவா | கிழ | சர்வமத்வ ஏகாதசி |
| 28 | 13 | செவ் | துவா, 9-20 | உத் 28-48 | அ, 28-48 சி | 2 | 1 | திர | வட | பிரதோஷம் ஒட்டக்கூத் |
| 29 | 14 | புத | திர, 9-25 | திரு 30-5 | சி, 30-5 பி | 2 | 1 | சது | தெ-கி | ருக்வேத உபாகர்மம் தர் |
| 30 | 15 | வியா | சது, ○ 7-53 | அவி 29-48 | சி, 29-48 ம | 2 | 1 | பௌ | தெ-மே | யஜுர்வேத உபாகர்மம் |
| 31 | 16 | வெ | பௌ, 5-8 | சத 28 8 | சி, 60 | 4 | 1 | பிர | தெற் | ஆவணியவிட்டம்<br>காயத்திரிஜபம் |

ஆடி—கடக / ஆவணி—சிம்ம

| | | | |
|---|---|---|---|
| | குரு | அம் ராகு | |
| | 1 சிம்ம-பு<br>15 கன்-சு<br>16 கன்-பு | | ரவி பு-சு |
| | சனி கேது | | |

21உ உழவு செய்ய ஆடி 22, 29, ஆவணி 4, 11, 18. விதை விதைக்க 22, 29, ஆவணி 11, 14. மாடு வாங்க ஆடி 27, 29, ஆவணி 11, 12. ஆடி 19உ சிம்மத்தில் காதுகுத்த, 22உ சிம்மத்தில் சிரந்தம் செய்ய, ஆவணி 11உ சிம்மத்தில் விவாஹம் முதலிய சுபங்கள் செய்ய, ஆவணி 15உ ஆவணி அவிட்டம். நடராஜர் அபிஷேகம். ஆடி௴ 25உ ஆடி கிருத்திகை திருத்தணியில் தெப்ப உச்சவம், அவ்வையார் சென்னை ஸ்ரீலஸ்ரீ C. S. சுந்தரசாமி தேசிகர் 6000 அடியார்களுக்கு அமுது படைப்பார், ஆடி௴ 18உ திருவையாறு 18-ம் பெருக்கு, 23உ சேலம் மாரியம்மன் திருவிழா, ஆடி௴ 25உ மூர்த்தி நாயனார், புகழ்ச்சோழ நாயனர் திருநக்ஷத்திரம். 26உ வீராம்பட்டினம், ரதம், 28உ மதுரை பிட்டு உச்சவ ஆரம்பம், 31உ சேதுஸ்நானம், ஆவணி 2உ புத்தூர் செங்குந்தர் உதவியால் திரௌபதை அம்மன் உச்சவம், 3உ மதுரையில் கரிக்குருவிக்கு உபதேசம், நாரைக்கு முத்தி, மாணிக்கம் விற்றல், இரவு சுமணரைக் கழுவேற்றல், 11உ திருநெல்வேலி ஆவணிமூல உச்சவம், 12உ மதுரையில் மண்சுமந்த திருவிளையாடல், 13உ விறகு விற்றல், ஒட்டக்கூத்தர் திருநாள், 15உ உச்சவபூர்த்தி.

# 'செங்குந்த மித்திர புத்தகசாலை

**நல்ல புத்தகங்கள்!** **நம்பிக்கையான விலைகள்!**

இது வெளியூர்களிலுள்ள செங்குந்தர்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்கி வ. பா. தபாலில் அனுப்புவதற்கெனவேற்பட்டுள்ளது. இவ்விடம் தமிழிலும் ஆங்கிலத்திலும் அகராதிகள், புராணங்கள், நவீனபுத்தகங்கள், பிரபந்தங்கள், வைதிகநூல்கள் பாடபுத்தகங்கள் முதலியவற்றின் திருத்தமானப்ரதி அழகான கட்டடங்களில் கிடைக்கும். தேவையான புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப்புவோர்ட்டர் அனுப்புவதோடு அதன் மதிப்பின் கால்பாகத்தை முன்பணமாக மணியாடர் செய்புக. மிகுதிநிற்கும் ரூபாயைத் தபால் பாகிங் செலவோடு வி. பி. போஸ்டில் புத்தகம் வாங்கிக்கொள்ளுவோம். முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்பட மாட்டா.

இவ்வியாபாரத்தில் வரும் லாபமெல்லாம் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் ஏழைச் செங்குந்தமாணவரின் கல்விநிமித்தமாகச் செய்யும் தருமங்களுக்கு உதவுமாகையால், புதிய புத்தகங்களை வாங்க விரும்புகின்ற நேயர்கள் குலாபிமான சிந்தையுடன் நமது 'செங்குந்தமித்திரன் புத்தகசாலை'க்கே ஆர்டர் அனுப்ப வேண்டிக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

மானேஜர்: 'செங்குந்தமித்திரன்' ஆபீஸ்,
31, அரண்மனைக்காரன் தெரு.

---

## சந்தாநேயர்களு அறிக்கை.

(1) சென்றமாதம் அறிவித்தபடி வி. பி. (3) நமது பத்திரிகை ஒவ்வொரு இங்கிலீஷ் தபாலில் பத்திரிகையை அனுப்பிப் பழையதமும் நான்காம் தேதி தொடங்கி ஐந்து பாக்கியையும் புது வருஷத்திய சந்தாவையும்ளில் தபாலில் போடப்படும். இதில் தவறுளிப்பதால் சந்தாநேயர்களுக்கு அநாவசியதமேனும் தவக்கமேனும் நேராது எந்தச்மாக மூன்றணு நஷ்டமேற்படுமென நினைத்துஞ்சிகையாவது யாருக்காவது எம்மாதமே இம்மாதத்திய சஞ்சிகையையும் அநேகமாயும் கிடைக்காமலிருந்தால் அவர் தபால் முன்பணம் பெற்றுக்கொள்ளாமலேயே அனுமதிகாரிகளுக்கு மனு எழுதவேண்டும். புகிறோம். பத்திரிகையைப் பெற்றுக்கொண்டவுடன் அன்பர்கள் பாக்கித் தொகையையும் புதுச் சந்தாவையும் மணியாடர் செய்துவிட வேண்டப் பெறுகின்றனர். அப்படி மணியாடர் செய்யாத அன்பர்களுக்கு அடுத்த மாதத்திய பத்திரிகையை வி.பி. யில் அனுப்புவோம பத்திரிகையைப் புது வருஷத்திற்கு வாங்க விரும்பாதவர்கள் பழைய பாக்கியாகிய ரூபாய் ஒன்றரையை மணியாடரில் அனுப்பிவிட்டுத் தம் விருப்பத்தை உடனே தெரிவித்துவிடுவாராக.

(2) சென்ற டிசம்பர் 20-தேதிக்கு அப்பால் பணம் அனுப்பிய சந்தா நேயர்களின் பெயர்கள் இம்மாதப் பத்திரிகையில் இடமில்லாததால் அடுத்த மாதம் வெளியிடப் பெறும்.

### விளம்பர விகிதங்கள்.

'செங்குந்த மித்திர'னில் விளம்பரஞ் செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விகிதம் முன்பணமாகக் கட்டணஞ் செலுத்தவேண்டும். :—

| | | ஒரு வருஷம் | ஆறு மாதம் | மூன்று மாதம் | ஒரு மாதம் |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ | 60 | 30 | 16 | 6 |
| ½ பக்கம் | ,, | 40 | 20 | 11 | 4 |
| ¼ பக்கம் | ,, | 24 | 12 | 6½ | 2½ |

இங்ஙனம்:

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,
31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

# " செங்குந்த மித்திரன் "

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முக முதலியார், எம்.ஏ., எல்.டி.

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்றமடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பழம்புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகளும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் ... நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகள், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புகளும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குகளும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் சங்கம் முதலியவைகளும் வெளிவரும். நம் அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்கின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டு முதல் ... இன்னும் அழகாகவும், இன்பகரமாகவும், பயனுந் தரும்படியாகவும் சித்திரங்களோடு கூடியதாகவும், பல விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுமக்களின் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும்படியும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்களின் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் 'செங்குந்த மித்திர'னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமாயின் 'மித்திர'னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் கைகூடுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக்கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள், வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் காட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ. பை. | | |
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை ஒன்றுக்கு | 0—2—6. |
| பினங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிகா | 2—0—0 | | |

## " செங்குந்தர் பிரபந்தத் திரட்டு "

என்னும் அரிய பெரிய நூல் வெளிவிட்டது. இதனுள் கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் செய்தருளிய 'ஈட்டி எழுபது' 'எழுப்பெழுபது' இவ்விரண்டும், புகழேந்திப்புலவர் செய்தருளிய 'திருக்கை வழக்கமும்' மற்றைப் பெரும்புலவர் பலர் செய்தருளிய 12 பிரபந்தங்களும் அடங்கும்.

'ஈட்டி யெழுபது' கச்சிப் பிரதாபனுய்த்தருளிய பேருரையுடன் கூடியது. இவ்வுரை செங்குந்தரது வழக்கம், ஒழுக்கம், அறிவு, ஆற்றல், கொடை முதலானவற்றை மிகச் செவ்வையாக எளிய நடையில் விளக்குவது.

இன்னூற்கொருகுதி, தமிழாசிரியர் திருவா. கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் எழுதிய முன்னுரையும், தமிழாசிரியர் ஸ்ரீ மு. இராகவையங்கார் அவர்கள் எழுதிய ஆராய்ச்சியுரையும், கல்வெட்டாராய்ச்சியினர் ஸ்ரீமத் கோபிநாத ராயர் அவர்கள் எழுதிய அரிய கல்வெட்டுரையும், மற்றும் பல நல்லிசைப் புலவர்களின் மதிப்புரைகளும், ஸ்ரீலஸ்ரீ காசி நாகலிங்க முனிவர் அவர்களால் பல ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் எழுதிய பதிப்புரையும் கொண்டது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலத்து ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத் திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

| | | |
|---|---|---|
| உயர்ந்த பதிப்பு காலிகோபயிண்டில் பொன் ...செய்தது விலை | ரூ. 3-0-0 | தபாற் கூலி அ. 8 |
| 'செங்குந்த மித்திரன்' சந்தா நேயர்களுக்கு ... | ,, ,, 2-8-0 | பிரத்தியேகம். |

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சட்டதிட்டங்கள் விலை அணா 2.

புத்தகம் கிடைக்குமிடம் :—

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

This Journal is published by T. N. Satapathi M... ... South Indian Sengundha Mahajana Sangam Madras, at 3... Armenian Street, Madras, and ... printed T. C. Nataraja Mudaliar at the Cambridge Press, 2/19-A, Armenian Street, Mad...

129803
JL
-1592 ...
N28.2.7